[redacted]

Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரெண்டு+IV விலை ரூபா 7.00


# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 மாசி – 07 ஆம் நாள் ஹிஜ்ரி 1423 முஹர்ரம் 09 (19.02.2005) சனிக்கிழமை இதழ்: 142

## புலிகளின் முக்கியஸ்தர்கள் கிளிநொச்சிக்கு திரும்பினர்!





(கிளிநொச்சி)

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைப் பகுதிகளுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் நேற்று கிளிநொச்சி திரும்பினர்.

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பூரிலிருந்து விமானப்படை ஹெலி மூலம் புறப்பட்ட இவர்கள், நேற்று மாலை 4 மணி

(12 ஆம் பக்கம் பார்க்க)


## விவசாய சம்மேளனத்தினர் நேற்று கண்டனப் பேரணி!

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட ஆறுபேர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து விவசாய சங்க சம்மேளனத்தினர் யாழ்.நகரில் நேற்று கண்டனப் பேரணியொன்றை நடத்தினர்.

இந்தப் பேரணி நேற்றுக் காலை 11 மணியளவில் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் முன்றலிலிருந்து ஆரம்பித்தது. பேரணில் கலந்துகொண்டவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தைச் சென்றடைந்தனர்.

அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட பிரதிநிதியொருவரைச் சந்தித்து, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன், மாமனிதர் சந்திரநேரு உட்பட



ஆறுபேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இவ்வாறான செயல்களுக்கு அரசாங்கம் பின்னணியாகச் செயற்படுவதை உடன்நிறுத்த சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டுமெனத் தெரிவித்து மகஜரைக் கையளித்தனர்.

# சமாதான முன்னெடுப்புகளில் ஐ.நா. தலையிடும் சாத்தியம்!

(கொழும்பு)

### கொழும்பு அரசியல் அவதானிகள் கருத்து

இலங்கை சமாதான முயற்சிகளில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துவருவதாக கொழும்பு அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

ஐ.நா பொதுச் செயலர் கொபி அனான் கொழும்பில் தனது விசேட தூதுவர் ஒருவரை நியமிப்பது தொடர்பான சாதகத்தன்மைகள் குறித்து இலங்கை அரசுடன் அண்மையில் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

உள்நாட்டுப் பிரச்சனை தொடர்பான தீர்வு முயற்சியில் இது ஒரு முக்கிய திருப்புமுனை எனக் கருதும் அரசியல் அவதானிகள் –

இவ்வாறு விசேட தூதுவர் ஒருவரை நியமித்து கிழக்குத்தீமோர், யுகோஸ்லாவியா, சைப்ரஸ், மியன்மார் போன்ற நாடுகளில் நிலைமைகளை ஐ.நா அவதானித்து வருவதாகவும் –

இலங்கையிலும் இத்தகையதொரு தூதுவரை கொழும்பிலும் நியமிக்க முயற்சிக்கின்றமை இலங்கை விவகாரத்தில் ஐ.நா ஆழமான – நெருங்கிய தீர்வு முயற்சிகளில் பங்களிப்பு செய்யவுள்ளதையே காட்டிநிற்பதாகவும் குறிப்பிட் டனர்.

நோர்வேயின் அனுசரணையுடன் நீண்டகாலமாகப் பேச்சுக்கள் நடத்தப்பட்டபோதும் – எந்த உருப்படியான முன்னேற்றத்தையும் எட்ட முடியாதளவுக்கு அரசு முட்டுக்கட்டைகளை போட்டு வரும் சூழலில் அனுசரணையாளர் பாத்திரத்தை ஐ.நா ஏற்கக்கூடும் என்னும் கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இதேவேளை – இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகளில் ஐ.நா இறங்கினால் அது தமிழர்களின் விடுதலைப்போராட்டத்துக்கு அதிக சாதக நிலையைத் தோற்றுவிக்கும் என்று எதிர்வு கூறப்படுகிறது.

## உயர்பாதுகாப்பு வலயக் காணிகளை சுவீகரிக்க அரசாங்கம் நடவடிக்கை!

## திங்களன்று வரும் சொல்ஹெய்ம்

## அமெரிக்கப் போர்க் கப்பல் இன்று கொழும்பு வருகிறது!

# உயர்பாதுகாப்பு வலயக் காணிகளை சுவீகரிக்க அரசாங்கம் நடவடிக்கை!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களை அரசாங்கம் சட்டபூர்வமான முறையில் சுவீகரிப்பதற்காக புதிய நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாமல் இருக்கும் நிலங்களை அரசாங்கம் சுவீகரிக்க வுள்ளதாகவும், இதற்கான சட்டத் திருத்தம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# திங்களன்று வரும் சொல்ஹெய்ம் ஒரு வாரகாலம் தங்கியிருப்பார்!




(கொழும்பு)

நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் - ஒருவாரகால விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு வரவுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நேரில் பார்வை யிடவும், அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தவும் இலங்கை வரும் சொல்ஹெய்ம், எதிர்வரும் 28ஆம் திகதிவரை இங்கு தங்கியிருப்பார்.

இந்தக் காலப் பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் மற்றும் அரசியல் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசும் சொல்ஹெய்ம் - கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கப் போர்க் கப்பல் இன்று கொழும்பு வருகிறது!




நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற் கொண்டு அமெரிக்க கடற்படைக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரவுள்ளது.

'புளூறிட்ஜ்' (Blue Ridge) எனப் பெயரி டப்பட்ட இந்தக் கப்பல் 7 ஆவது படைத் தள பதியின் கீழுள்ள கடற்படைப் கப்பலாகும்.

கடந்த 1971 ஆம் ஆண்டு முதல் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்தக் கப்பலின் வருகை - இலங்கைக் கடற்படையின் ஆழ் கடல் கண்காணிப்பு மற்றும் எதிர்ப்பு நடவடிக் கைகளுக்கு உந்துசக்தியாக அமையும் என்று அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இன்று கொழும்புத்துறை முகத்தை வந்தடையும் இந்தக் கப்பலில் பல்வேறு வசதிகளும் உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத் தக்கது.

## அத்துரு கிரியவில் தேடுதல் நடத்திய

# பொலிஸ் அதிகாரி மீது நேற்று வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் இராணுவப் புலனாய்வுத்துறையின் இரகசிய மறைவிடம் ஒன்றில் திடீர் தேடுதல் நடத்தியமை தொடர்பாக முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல மீது 19 குற்றச்சாட்டுக்களுடன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற் படும் வகையில் உத்தியோகபூர்வ இராணுவ இரகசியங்களை வெளியிட்டதாகவும், இராணு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் ஏமாற்று நடவடிக்கைகளை தொடர்ந்தும் பொறுக்கமுடியாது!

## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(திருகோணமலை)

இலங்கை அரசாங்கத்தின் ஏமாற்று நட வடிக்கைகளை தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது - இனிமேலும் இத் தகைய ஏமாற்று நடவடிக்கைகள் தொடர்ந் தால், எமது இலட்சியத்தை நோக்கிய பாதையை முன்னெடுப்பது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது என்று தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

மூதூர் கிழக்கில் இடம்பெற்ற திருகோண மலை மாவட்ட பொதுஅமைப்புக்களின் பிரதி

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# மீனவர் சங்கங்கள் ஒன்றிணைந்து வெகுஜனப்போராட்டம் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனம், அங்கத்துவ சமாசங்கள், கிராமிய மட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன இணைந்து இம்மாதம் 23ஆம் திகதி அரசுக்கெதிராக வெகுஜன போராட்டம் ஒன்றை நடத்துவதென கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சம்மேளனத்தின் இயக்குநர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

❖ சுனாமி அனர்த்தத்தின்போது முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான உதவிகளை வழங்க அரசு பின்னடிக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான சகல உதவிகளும் சரிசமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென அரசைக் கோரியும்,

❖ புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் வடக்கு - கிழக்குப் பகுதி மக்களுக்கு எவ்வித உதவிகளும் வழங்கப்படாததைக் கண்டித்தும்,

❖ வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் கீரிமலை, காங்கேசன்துறை, தையிட்டி, ஊறணி, மயிலிட்டி, பலாலி, வளலாய் ஆகிய கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளில் வாழும் மக்களை அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய தொண்டமனாறுக்கு அண்மையில் வளலாய், இடைக்காடு ஆகிய கிராமங்களில் குடியமர்த்தக் கோரியும்,

❖ சமாதான காலத்தில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த 73 வரையான விடுதலைப்புலிப் போராளிகள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இவைகளைக் கண்டித்து வெகுஜனப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த வெகுஜனப் போராட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர் சமாசங்கள், அனைத்து கிராமியமட்ட சங்கங்களின் அங்கத்தவர்கள், கடற்றொழிலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், கூட்டுறவுத்துறையினர் மற்றும் பொது அமைப்புக்களையும் இப் போராட்டத்தில் பங்குபற்றுமாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

கடற்றொழிலாளர் சம்மேளனம், யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர் சமாசங்கள் தனித்தனியாக தமது பிரதேசத்தின் கோரிக்கைகள் அடங்கிய ஜனாதிபதிக்குரிய மகஜரை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடமும் மற்றும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஐக்கிய அமெரிக்க ஸ்தானிகராலயம், போர் நிறுத்தக் குழு ஆகியவற்றுக்கான மகஜர்களை அந்தந்தப் பிரதிநிதிகளிடமும் கையளிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப் பட்டிருப்பதாக சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன. (21)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா, இலங்கை மின்சார சபையின் உதவிப் பொறியியலாளர் கே.தவராஜா கலந்துகொள்வார். வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசில்களை திருமதி கே.தவராஜா வழங்கி கௌரவிக்கவுள்ளார். (12)

❖ ❖ ❖

வெள்ளாம்போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொண்டு வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கவுள்ளார். (29)

❖ ❖ ❖

கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட செயற்திட்ட இணைப்பாளர் கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கச்சதீவு திருநாள் இன்று ஆரம்பம்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த தவக்கால திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இன்று மாலை 5.30 மணிக்கு கொடியேற்றமும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படுவதுடன், நாளை காலை 8.00 மணிக்கு நிறைவுத் திருப்பலி, நற்கருணை எழுந்தேற்றம் மற்றும் கொடியிறக்கமும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது.

ஆலய நிகழ்வுகளுக்கு வரும் பக்தர்களுக்கு கச்சதீவுப் பகுதியில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதுடன், இன்றுகாலை 9.00 மணிமுதல் நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கான படகுசேவையும் இடம்பெறவுள்ளது. (113)

# கிராம அபிவிருத்தித் திட்டம் குறித்து ஐந்துநாள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டம் II இன்கீழ் கிராம அபிவிருத்தித்திட்டம், கிராம விவசாய அபிவிருத்தித்திட்டம், கிராம சமூக பொருளாதார தோற்றப்பாடு ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான பயிற்சிநெறி எதிர்வரும் திங்கட்கிழமை முதல் 05 நாட்கள் திருநெல்வேலி மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சிநெறியை யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஆரம்பித்து வைக்கவுள்ளார். தொடர்ந்து இப்பயிற்சிநெறி 25ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளது.

இப்பயிற்சிநெறியில் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றோர் கலந்துகொள்ளவுள்ளனர். (113)

# சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்த பூசகர்களுக்கும் நிவாரணம் வழங்குக

## இந்து குருமார் கோரிக்கை

வடமராட்சி கரையோரப் பகுதிகளில் சுனாமி அனர்த்தத்தால் அழிந்து போயுள்ள இந்து ஆலயங்களின் பூசகர்கள் வருமானமின்றி கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். எனவே, இவர்களுக்கும் நிவாரணம் கிடைக்க வழிசெய்யுமாறு இப்பிரதேச இந்து மதகுருமார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தால் வடமராட்சியின் கரையோரப்பகுதியில் பல இந்துக் கோயில்கள் சேதமடைந்தன. இவற்றில் பூசைநடத்தி வந்த பல பூசகர்கள் வருமானமின்றி பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர்.

எனவே, இவர்கள் தமக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தித்தர சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரியுள்ளனர். (14)

## அவசர கூட்டம்

அகில இலங்கை அஞ்சல் தந்தி தொலைத்தொடர்புகள் சேவையாளர் சங்கத்தின் யாழ்.மாவட்டகிளை உறுப்பினர்களுக்கான அவசர கூட்டம், நாளை காலை 10 மணிக்கு யாழ். பிரதம தபால் நிலைய கட்டடத்தில் சங்கத் தலைவர் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முக்கிய சில முடிவுகள் எடுக்கவேண்டியிருப்பதால் அனைத்து சங்க உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் மோகன்ராஜ் தெரிவித்தார்.

## பொதுமக்களுடன் சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச மக்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் சாவகச்சேரி பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

## சிறு விளம்பரம்

விற்பனைக்குண்டு

சிறுகுறிஞ்சாக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி - த.தவராசா, பிள்ளையார் கோயிலடி, மூளாய்.
T.P: 0212225802 (C/3830)

நிறைஞ்சனாஸ்
ரஜனி, அம்பிகா, சத்தியராஜ் நடித்த
நான் சிகப்பு மனிதன்
கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
15.02.2005 முதல் அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க காதல் என்னும் திரை ஓவியம் திரையிடப்பட்டுள்ளது.
காதல் கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
டைட்டானிக் டைட்டானிக் மறு அறிவித்தல் வரை காண்பிக்கப்படமாட்டாது.

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், நதிஷா, ரவிகிருஷ்ணா நடித்த
சுக்ரன்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

ராஜா யாழ்ப்பாணம்
அஜித் -திரிஷா நடித்த
ஜி
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
தேவதையைக் கண்டேன்
பு.நே. 11.00, 3.00, 7.00, 10.00
21ம் திகதி முதல் திருப்பாச்சி

# முகாமைத்துவ கற்கைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் முகாமைத்துவமானி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் அல்லது சிறு வணிக முகாமைத்துவ கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்பங்களை மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்கைநெறி விரிவுரைகள் யாவும் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில இடம்பெறும் எனவும் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலைய இயக்குநர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரா தெரிவித்துள்ளார்.

# உயர் கல்வி நிறுவன மாணவர்களை றீடோ, வூஸ் நிறுவனத்தினர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கலந்துரையாடல் நேற்று காலை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களின் அடிப்படையில் உதவிகளை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஊடாகச் செய்ய, றீடோ (*Reerdo*) மற்றும் வூஸ் (*Wose*) நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இந்தச் சந்திப்பில் றீடோ நிறுவனப் பணிப்பாளர் செபஸ்ரியன் செல்வராஜா, றீடோ நிறுவனத்தைச் சேர்ந்த ரகு, வூஸ் நிறுவனத்தின் வன்னிக்கான இணைப்பாளர் சீலன், மற்றும் துஷ்யந்தன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாதிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவன மாணவர்களுக்கான உதவிகளை வெகுவிரைவில் வழங்குவோம் என இவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வலிகாமம் பகுதி மக்களால் சக்கோட்டை, இன்பருட்டி ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட இடங்கள் இன்று சிரமதானப்பணி மூல மாக துப்புரவாக்கப்படவுள்ளது.

சிரமதானப் புனரமைப்புப் பணிகளில் சக்கோட்டை புனித சவேரியார் ஆலய பங்குத்தந்தையும் இப்பகுதி மக்களுடன் இணைந்து செயற்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (91)

## யாழ்.பல்கலையில் பிரெஞ்சுத் திரைப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலை திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் புகழ்பெற்ற பிரெஞ்சுத் திரைப்பட நெறியாளர் 'ஜீன் றெனொய்ர்' உருவாக்கிய "திருவாளர் லாங் செய்த குற்றம்" என்னும் திரைப்படம், வீடியோக் காட்சியாக ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது.

இது ஒரு புனைகதை எழுத்தாளரையும் பதிப்பகச் செயற்பாடுகளையும் மையமாகக் கொண்டமைந்திருக்கிறது.

ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து படக்காட்சியைக் கண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் எந்திரவியல் டிப்ளோமா கற்கை நெறி கற்கும் மாணவர்கள் அனைவரையும் நாளையதினம் காலை 9.00 மணிக்கு நடைபெறும் செயன்முறை பரீட்சைகளான சடப்பொருளியலின் இயல்புகள், மின்னியலின் அடிப்படை தத்துவம் ஆகியவற்றுக்கு தோற்றுமாறு இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலைய இயக்குநர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரா கேட்டுள்ளார்.

இப்பரீட்சைக்குத் தோற்றத் தவறும் மாணவர்களுக்கு பிறிதொரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது எனவும், இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பை இழக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

செவ்விளக்கு
-நாடகம்-
புரட்சியின் பேரொளியில் இருளகர்ந்த இரவு முடிவுறும் ஓர் நாள்
காலம்: 19.02.2005 (சனி)
20.02.2005 (ஞாயிறு)
நேரம்: பி.ப. 6.00 மணி
இடம்: யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட வளாகம் (O.LB கட்டடத்திற்கு முன்னுள்ள திறந்தவெளி)
Five Theatre Students Group
University Of Jaffna.
விளம்பர அனுசரணை: நமது ஈழநாடு

### அரசசார்பற்ற நிறுவனங்கள்

# வங்கிக் கணக்கு மூலமாகவே வெளிநாட்டு உதவி பெறமுடியும்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து சுனாமி உதவியாகக் கிடைக்கும் பணத்தை வைப்பிலிடுவதற்காக சுனாமி சமூகத்துக்கு அனுப்பும் கணக்கு என்னும் பெயரில் விசேட கணக்கொன்றை ஆரம்பிக்குமாறு மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இந்த விசேட கணக்குகளை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகள் அனைத்து வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விசேட வங்கிக்கணக்கு கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் செயற்படுத்தப்படுவதாகவும் மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

இதனபடி இலங்கையிலுள்ள அனைதது அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் வெளிநாட்டிலுள்ள தனிப்பட்டவர்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்கள் மூலம் கிடைக்கும் நிதிகள் எதிர்காலத்தில் இந்த வங்கிக்கணக்கு மூலமே செயற்படுத்த முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனமொன்று பல வங்கிகளிலோ, அல்லது ஒரு வங்கியின் பல கிளைகளிலோ ஒரு கணக்குக்கு அதிகமான கணக்குகளில் வைப்புச் செய்வதற்கோ விரும்பினால், அந்த நிறுவனம் செயற்படும் இடம் மற்றும் செயற்திட்டத்தின் தேவைக்கமைய பல கணக்குகளை வைத்திருக்க அனுமதி வழங்கப்படுமெனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (தே)

# அரச ஊழியர்களுக்கு விசேட நிவாரணங்கள்!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு விசேட நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த நிவாரணங்கள் நான்கு முறைகளூடாக வழங்கப்படவுள்ளதாகப் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட போது, பாதிப்புக்குள்ளான அரச ஊழியர்கள் கடமைக்கு சமூகமளிக்காமல் இருந்தால், அவர்களுக்கு அந்த நாட்களை சம்பளத்துடன் கூடிய விடுமுறையாக வழங்குதல், பாதிக்கப்பட்ட வீடுகளுக்காகப் பெறப்பட்ட கடன்களை இரத்துச் செய்தல் என்பன இந்த விசேட நிவாரணங்களுக்குள் அடங்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றைவிட வீட்டுக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல், பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க ஓராண்டு சம்பள முற்பணம் வழங்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிவாரணங்களைப் பெறுவதற்குப் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள், தமது பாதிப்புத் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டுமெனவும், அதன்பின்னர் அவர்களுக்கான நிவாரணம் துரிதமாக வழங்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.(தே)

### வடக்கு - கிழக்குப் பகுதிகளில்

# பத்து லட்சம் கண்ணிவெடிகள் இராணுவம் புதைத்துள்ளது

### ஒப்புக்கொள்கிறார் இராணுவத் தளபதி

கடந்த இரண்டு தசாப்த கால போரில் வடக்கு - கிழக்கில் படையினரால் பத்து லட்சம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டே கொட தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் நிதியுதவியுடன், நோர்வே அரசாங்கத்தால் இலங்கை இராணுவ கண்ணிவெடியகற்றும் பிரிவுக்கு நவீனரக எம்.வி. 4 மினி பிளெயில் (m.v.4 mini flail) என்ற கண்ணிவெடியகற்றும் இயந்திரம் கையளிக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பின்னர், இராணுவம் கண்ணிவெடியகற்றும் பணியை ஆரம்பித்தது. ஆனாலும் இந்தச் செயற்பாட்டின் முன்னேற்றம் மிகவும் மெதுவாகவே உள்ளது. இதற்குக் காரணம் கண்ணிவெடிகளை அகற்றக் கூடிய போதிய உபகரணங்கள் இராணுவத்திடம் இல்லாமையாகும். இந்தக் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் 46 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். இந்த இழப்புகளைத் தவிர்க்க வேண்டுமெனில், போதியளவு உபகரணங்கள் இராணுவத்துக்குத் தேவையாகும்.

இந் நிலையில் அமெரிக்கா கண்ணிவெடியகற்றும் பயிற்சியை வழங்க முன்வந்தது. இது இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவின் காலத்தில் 2003 ஆம் ஆண்டு நடைபெற்றது.

இதுவரை 400 இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினர் இந்தப் பயிற்சியைப் பெற்றுள்ளனர். இந்த வருடம் மேலும் பல படையினர் இந்தப் பயிற்சியைப் பெறவுள்ளனர்.



இந்தக் கண்ணிவெடியகற்றும் படைப்பிரிவு நேரடியாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகிறது. இந்தப் படைப்பிரிவுக் கான உதவிகளை வழங்குவதாக ஜப்பான் ஏற்கனவே உறுதியளித்துள்ளது.

அரசாங்கத்தின் திட்டப்படி 2007 ஆம் ஆண்டில் இலங்கை கண்ணிவெடிகளிலிருந்து விடுபட்ட நாடாக வேண்டுமென்பது தான் இலக்கு.

ஆனாலும், இந்த இலக்கை எட்டுவதற்கு உதவி வழங்கும் நாடுகள் - இந்த உபகரணங்களை வழங்கவேண்டும்.

இதில் நோர்வே அரசாங்கம் இராணுவத்துக்கான உதவிகளை ஏற்கனவே நீடித்துள்ளதாக என அவர் மேலும் தெரிவித்தார்.

# சந்திரிகாவின் உரைக்கு பதிலளிப்பது குறித்து ஜே.வி.பி ஆலோசனை!

(கொழும்பு)

ஜே.வி.பி. தொடர்பாக நிட்டம்புவ கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக எந்த வகையான கருத்துக்களை வெளிப்படுத்துவது என்பது குறித்து ஜே.வி.பியினர் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அரசியல் கட்சி அரசாங்கத்தில் அங்கம்வகிக்க விரும்பாவிட்டால் விலகிச் செல்லலாமென ஜனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியினருக்கு மறைமுகமாக வெளிப்படுத்தியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக் குறித்து ஜே.வி.பியினர் உடனடியாகவே பதிலளிக்கும் அறிக்கை ஒன்றை வெளியிடமுற்பட்டபோதிலும், சில முக்கியதஸ்தர்களின் தலையீட்டால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது.

இதனையடுத்து, ஜனாபதிபதி செயலகம் - ஊடகங்கள் தவறான முறையில் ஜனாதிபதியின் கருத்தைத் திரிபுபடுத்தி வெளியிட்டதாகத் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இதனால் ஜே.வி.பி. தரப்பு அமைதி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், ஜனாபதிபதியின் அறிவிப்பு குறித்து கடும் விசனம் அடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (01)

# பட்டங்கள் வழங்கும் அங்கீகாரம் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு!

இரண்டு தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் பட்டங்கள் வழங்கும் அதிகாரத்தைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

எட்வைனாஸ் தனியார் கல்வி நிறுவனம், மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனம் ஆகிய இரண்டு தனியார் நிறுவனங்களுக்கே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஐந்து நிறுவனங்கள் பட்டங்கள் வழங்குவதற்கான அனுமதிகோரி, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பங்களை அனுப்பியிருந்தன. அதில் இந்த இரண்டு நிறுவனங்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை விபரங்கள் தொழில்நுட்ப நிறுவனத்துக்கும் பட்டங்களை வழங்கும் அனுமதி முன்னர் வழங்கப்பட்டதாகவும், இன்போமெற்றிக் என்ற நிறுவனமும் பட்டங்களை வழங்குவதற்கான அனுமதியைக் கோரியுள்ளதாகவும், அந்த நிறுவனத்தின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பட்டங்கள் வழங்கும் அதிகாரத்தை கல்வி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கும் உரிமை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு உண்டெனவும் அவர் தெரிவித்தார்.

சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பின், பட்டங்களை வழங்குவதற்குத் தகுதியான நிறுவனங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், இந்த அனுமதி வழங்கப்படும் நிறுவனங்கள் எந்த விதத்திலும் தனியார் பல்கலைக்கழகங்களாக இருக்கமட்டாதெனவும் அவர் தெரிவித்தார். (தே)

### அனுராதபுர- குருநாகல் மாவட்டங்களில்

# தப்பியோடிய 1500 படையினருக்கு விலகிச் செல்வதற்கான அனுமதி!

(கொழும்பு)

அனுராதபுர மற்றும் குருநாகல் மாவட்டங்களில் - இராணுவத்திலிருந்து தப்பியோடிய சுமார் 1500 பேருக்கு நிரந்தர விலகல் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இராணுவத்திலிருந்து தப்பியோடியோருக்கு விலகல் சான்றிதழ் வழங்கி, உத்தியோகபூர்வமாக சேவையிலிருந்து விலகுவதற்கான இடம்பெயர்சேவை - அனுராதபுர, குருநாகல் மாவட்டங்களில் நடத்தப்பட்டன.

கடந்த சில நாட்களாக நடத்தப்பட்ட இந்த நிகழ்விலேயே தப்பியோடிய படையினரில் 1500 பேர் இராணுவத்திலிருந்து விலகியதற்கான சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை - இன்னமும் 40 ஆயிரம் பேர் இராணுவத்திலிருந்து தப்பியோடி, தலைமறைவாக வாழ்ந்து வருவதாகப் படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (01)

# 100 மீற்றர் பாதுகாப்புவலயம்; முடிவில் எந்த மாற்றமுமில்லை!

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)



கடற்கரையிலிருந்து நூறுமீற்றருக்கு அப்பால் குடியிருப்புகள் அமைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தில் எந்தவித மாற்றமும் இல்லையென, ஜனாதிபதி சந்திரிகா - ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கட்சித்தலைவர்களின் மாநாட்டில் தெரிவித்தார்.

நூறு மீற்றருக்கு அப்பால் குடியிருப்புகளை அமைப்பதென்று அரசு எடுத்துள்ள தீர்மானத்தை மக்களுக்கு தெரிவிப்பதற்காக உள்நாட்டு மற்றும்வெளிநாட்டு நிபுணர் குழுவொன்றை எதிர்காலத்தில் அமைப்பதற்கும்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாணங்களை வழங்குவது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இந்த அனர்த்தத்தில் வீடுகளை அமைத்துக் கொடுப்பதெனவும், மற்றையவர்களுக்கு மூன்று கட்டடங்களாக நிதியை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர், ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திர சமரவீர ஆகியோர் கலந்து கொண்டனர். (தே)

### வடக்கு - கிழக்கு பகுதியில்

# சுனாமி கடல்அனர்த்தத்தால் 17 ஆயிரத்து 24 பேர் மரணம்

(கொழும்பு)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கு பகுதிகளில் 17 ஆயிரத்து 24 பேர் உயிரிழந்ததாகவும், 7198 பேர் படுகாயமடைந்ததாகவும் தெரிய வருகிறது.

யாழ். மாவட்டத்தில் 1,256 பேர் உயிரிழந்ததுடன், 1,647 பேர் காயமடைந்தனர். 41,013 பேர் வாழ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். 11 பாடசாலைகள், 7,198 வீடுகள் உட்பட மூன்று மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் - 30 பேர் உயிரிழந்துள்ளதுடன், 670 பேர் காயமடைந்துள்ளனர். 1,603 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். 7,500 வீடுகள், ஒரு மருத்துவமனை என்பன சேதமடைந்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2, 771 பேர் உயிரிழந்துள்ளதுடன்- 2,590 பேர் காயமடைந்துள்ளனர்.

21,178 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். 12 பாடசாலைகள், 4,000 வீடுகள் உட்பட இரு மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன.


திருகோணமலை மாவட்டத்தில்- 1,076 பேர் உயிரிழந்துள்ளனர். 69,212 பேர் இடம்பெயர்ந்துள்ளதுடன், 23 பாடசாலைகள், 16,378 வீடுகள் உட்பட 9 மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில்- 2840 பேர் உயிரிழந்ததுடன், 1575 பேர் காயமடைந்துள்ளனர். 61912 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். 36 பாடசாலைகள், 21126 வீடுகள் உட்பட 8 மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் - 9051 பேர் உயிரிழந்ததுடன், 6771 பேர் காயமடைந்துள்ளனர். 1 லட்சத்து 37 ஆயிரத்து 960 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

40 பாடசாலைகள், 29,077 வீடுகள், 29 மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன என, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரங்களில் இருந்து தெரியவ்ருகிறது.

# 3ஆவது சுற்று ஆட்டத்துக்கு ஸ்ரீ சாபன் தகுதி பெற்றார்!



(ரோட்டர்டாம்)

சர்வதேச ரெனிஸ் தொடரில் ஆசியாவின் முதல்நிலை வீரரான பாரடன் ஸ்ரீசாபன், கில்லர்மோ கோரியாவை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஹொலண்டில் உள்ள ரோட்டர்டாம் நகரில் ஏ.என்.பி அம்ரோ சர்வதேச ரெனிஸ் தொடர் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இரண்டாவது சுற்றுப் போட்டியில் தாய்லாந்தின் ஸ்ரீசாபன், இரண்டாம் நிலை வீரரான ஆர்ஜென்ரீனாவின் கில்லர்மோ கோரியாவை எதிர்த்து விளையாடினார்.

இதில் அபாரமாக விளையாடிய ஸ்ரீசாபன் 2-6, 7-6, 6-3 என்ற செட்களில் கோரியாவை வீழ்த்தி, மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு போட்டியில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் செக்குடியரசைச் சேர்ந்த உலிராக்கை வென்றார்.

விளையாட்டு

# அகமதாபாத் டெஸ்ட் போட்டி கொல்கத்தாவுக்கு மாற்றம்!



(புதுடெல்கி)

பாகிஸ்தான் அணி டெஸ்ட் போட்டியில் விளையாட மறுத்துவரும் அகமதாபாத்தில் ஒருநாள் போட்டியையாவது நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை செயற்குழு முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் 5 ஒருநாள் ஆட்டங்களிலும், 3 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

3 டெஸ்ட் போட்டிகளில் ஒன்றை அகமதாபாத்தில் நடத்த கிரிக்கெட் சபை முடிவு செய்தது. ஆனால் கலவரத்தைக் காரணம்காட்டி அகமதாபாத்தில் விளையாட மறுத்துவருகிறது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

இந்தநிலையில் பாகிஸ்தானின் முடிவு குறித்து புதுடெல்கியில் வியாழக்கிழமை இந்திய கிரிக்கெட் சபை செயற்குழு ஆலோசனை செய்தது.

அதில் அகமதாபாத்தில் டெஸ்ட் போட்டிக்குப் பதிலாக ஒருநாள் போட்டியை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அங்கு நடைபெறவிருந்த டெஸ்ட் போட்டியை கொல்கத்தாவில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து பாகிஸ்தான் அணி வருகை 4 முதல் 5 தினங்கள் தாமதமாகும் எனவும், போட்டி அட்டவணை மாற்றியமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஒழுங்கு விதிகளை மீறியதால் சொகைப் அக்தருக்கு அபராதம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் அக்தருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தோள்பட்டை காயம் காரணமாக அவதிப்பட்ட அக்தர், அவுஸ்ரேலிய பயணத்தின்போது பாதியில் தாயகம் திரும்பினார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின்போது அக்தர் இரவு விடுதிகளில் அதிகநேரம் செலவிட்டதாகவும், முன்னனுமதி எதுவுமின்றி பத்திரிகைகளுக்கு அவர் பேட்டி கொடுத்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இதன் காரணமாக அவரை அணியில் இருந்து நீக்கவேண்டுமென்று கப்டன் இன்சமாம் உட்பட முன்னணி வீரர்கள் அனைவரும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கை தொடர்பாக அக்தரிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் விசாரணை நடத்தியது. 3பேர் கொண்ட குழு நடத்திய விசாரணையில் அக்தர் அளித்த விளக்கங்கள் ஏற்கப்படவில்லை.

இதனால் அவருக்கு 65ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதற்கிடையே அக்தர் நிருபர்களிடம் கூறுகையில், நான் எந்தத் தவறையும் செய்யவில்லை. இரவு விடுதிகளில் நான் இருப்பது போல் வெளியான புகைப்படங்கள் என்னுடையவையல்ல. இது போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. என்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து நான் மேல்முறையீடு செய்யவுள்ளேன் என்றார்.

இதற்கிடையே காயம் காரணமாக அவதிப்பட்டுவரும் பாகிஸ்தான் வீரர்களிடம் இன்று உடற்தகுதி சோதனை நடத்தப்படவுள்ளது. இந்தச் சோதனையில் தேறினால் மட்டுமே, இந்தியப் பயணத்துக்கான அணியில் அக்தர் இடம்பிடிப்பார் என்பது உறுதியாகியுள்ளது.

# உச்சக்கட்ட சோதனையில் இந்திய கிரிக்கெட் அணி!

## ஜோன் ரைட் தெரிவிப்பு



(மும்பை)

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட் லக்னோவில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோது –

இந்திய அணி தற்போது உச்சக்கட்ட சோதனையில் இருக்கிறது என்பதை மறுக்கவில்லையெனத் தெரிவித்தார். முக்கியத்துவம் வாய்ந்த பாகிஸ்தான் பயணத்தில் சாதிக்கவேண்டுமென்றால், இந்திய வீரர்கள் அதிக நேர்த்தியுடன் திறமையை வெளிக்காட்டவேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

எந்தவித மெத்தனமும் இன்றி முடிவுக்கான வெறியுடன் ஆடினால் மட்டுமே, பாகிஸ்தான் அணியைத் தோற்கடிக்கமுடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# நியூஸிலாந்து – அவுஸ்ரேலியா இன்று பெரும் பலப்பரீட்சையில்!

(வெலிங்டன்)


ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி, நியூஸிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளிடையே 5 ஒருநாள் போட்டிகளும், 3 டெஸ்ட் போட்டிகளும் நடைபெறவுள்ளன. முதலில் ஒருநாள் தொடர் நடைபெறும். இன்று வெலிங்டனில் முதல் ஒருநாள் போட்டி பகல்-இரவு ஆட்டமாக நடைபெறும்.

2ஆவது போட்டி 22ஆம் திகதி கிறிஸ்ட் சேர்ச்சிலும், 3ஆவது போட்டி 26ஆம் திகதி ஒக்லாந்திலும், 4ஆவது போட்டி மார்ச் 1ஆம் திகதி வெலிங்டனிலும், 5ஆவதும் இறுதியுமான போட்டி 5ஆம் திகதி நேப்பியரிலும் நடைபெறவுள்ளன. டெஸ்ட் போட்டி அடுத்தமாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகும்.

**யாழ். மத்திய கல்லூரியில் இல்லங்களுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகளை முன்னிட்டு நடத்தப்பட்ட நீச்சல் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற வீரர் எஸ். நிமலகாந்த்.**



# அம்ரோ ரெனிஸில் பெடரர்!



ரோட்டர்டாமில் நடைபெற்ற ஏ.என்.பி அம்ரோ ரெனிஸ் தொடரில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் செக்குடியரசைச் சேர்ந்த உலிராக்கை வீழ்த்திய வெற்றிக்களிப்பில்.

## அகமதாபாத்தில்

# ஒருநாள் போட்டிக்கு பாகிஸ்தான் இணக்கம்

(இஸ்லாமாபாத்)

அகமதாபாத்தில் ஒருநாள் ஆட்டத்தில் விளையாட பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சம்மதித்துள்ளது.

இந்தத் தகவலை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தகவல் தொடர்பு ஆலோசகர் அப்பாஸ் ஜய்தி பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

பாதுகாப்புக் காரணம் கருதி அகமதாபாத் டெஸ்ட் ஆட்டத்தில் விளையாட பாகிஸ்தான் மறுப்புத் தெரிவித்தது. இதையடுத்து அங்கு ஒருநாள் ஆட்டத்தில் விளையாட கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உயர்நிலைக்குழு நேற்று ஆலோசனை நடத்தியது. முடிவில், அகமதாபாத்தில் ஒருநாள் ஆட்டத்தில் விளையாட முடிவு செய்யப்பட்டது.

# பாகிஸ்தான் அணியில் அக்தருக்கு இடமில்லை!

பாகிஸ்தான் அணியில் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் இந்தியாவுக்கான தொடரில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்ரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தபோது, அக்தர் காயம் காரணமாக இடையிலேயே நாடு திரும்பினார்.

சர்ச்சைகளில் சிக்கிவரும் அவர் - இந்தியச் சுற்றுப்பயணத்தில் சேர்க்கப்படுவாரா என்ற விவாதம் இடம்பெற்றுவந்தது.

இந்த நிலையில் அவருக்கு ஏற்பட்ட காயம் குணமடைய நான்கு, ஐந்து வாரங்கள் பிடிக்கும் என்பதால், அவர் இந்தியா செல்லும் அணியில் சேர்க்கப்படமாட்டாரெனத் தெரிய வருகிறது.

இந்தியா செல்லும் பாகிஸ்தான் அணி வீரர்களின் விபரம் இன்று வெளியிடப்படும்.

**ஏதென்ஸில்எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மனநிலை பாதிக்கப்பட்டோருக்கான ஒலிம்பிக் போட்டியின் ஆரம்பவிழா கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் எகிப்திய வீராங்கனை ஒருவர் ஒலிம்பிக் சுடரை ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.**



சென்றவாரத் தொடர்ச்சி....

# விளையாட்டு விபரீதமானது






துருவன்

# சிறுவர் அரங்கம்



சென்யூட்
இளவாலை

அன்புள்ள இளந்தேனீக்கள் கழகத்தவரே! நான் நல்ல சுகம். நீங்களும் சுகமாக இருக்க இறைவன் துணை புரிவார்.

மேலும் நாங்கள் நமது ஈழநாடு பத்திரிகையில் சித்திரம், பொது அறிவு, விடுகதை, பழமொழிகள் என்பன கொடுக்கலாமா? இத்துடன் இந்த சிறிய மடலை முடிக்கின்றேன்.

இப்படிக்கு
வே.சுதர்சினி

## அன்புக்குரிய சிறுவர்களே!

உங்களுக்குப் பிடித்தமான, உங்களுக்குத் தெரிந்த தரமான ஆக்கங்களை எழுதியும் ஓவியங்களை வரைந்தும் அனுப்புங்கள். அதற்கு எந்தத் தடையும் இல்லை.

- பாசமுடன் சாரு அக்கா

## இளமையில் கல்வி

இளமைக்காலம் இளமைக்காலம்
இனிமைக்காலம் என்றும் திரும்பவராது.
கல்வியும் காலம் சென்றால் மனதில் பதியாது
காலம் போனால் கல்வியும் போகும்.
கல்வி எம்மைத் தேடி வந்தகாலம் இளமைக்காலம்
நாம் கல்விக்காக அலையும் காலம் வருவதைத்
தவிர்க்க வேண்டும்.
ஆகையால் இளமையில் கல்வி சிலையில்
எழுத்து.

டபிள்யு.டுலக்ஷி
தரம் - 9
உடுவில் மகளிர் கல்லூரி



முற்றும்

## பிரிவு - தரம் 6 இலிருந்து தரம் 7 வரை ஓவியப்போட்டியில் பரிசு பெற்றவர்களின் பெயர்களும், ஓவியங்களும்.

முதலாம் பரிசு - செல்வராஜ் கிரன்ராஜ்
தரம் - 7
விவேகானந்தா கல்லூரி.
கொழும்பு - 13



இரண்டாம் பரிசு - சங்கீதா அருள்ராசன்
தரம் - 6
யாழ். இந்துக் கல்லூரி.



மூன்றாம் பரிசு - இராமநாதன் ரஜிதரன்
தரம் - 6
புனித அந்தோனியார் கல்லூரி.



# கலிலியோ கலிலி

விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் கலிலியோ கலிலி. இவர் இத்தாலி நாட்டில் 1564 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பௌதீகத்திலும், வானவியலிலும் பேரறிஞராகத் திகழ்ந்தவர்.

ஊசல் கடிகாரத்தைக் கண்டு பிடிப்பதற்குக் காரணமாக இருந்தவர். தொலைகாட்டி ஒன்றை முதன்முதலாகச் செய்து முடித்து, அதன்மூலம் வானவெளியை நன்கு ஆராய்ந்தார்.

பூமி முதலான கோள்கள் சூரியனைச் சுற்றுகின்றன என்ற கருத்தை வலியுறுத்தினார். சூரியனில் கரும்புள்ளிகள் உள்ளன என்றும், சந்திரனில் மலைகள் உள்ளன என்றும் தொலைகாட்டி மூலம் கண்டு கூறினார்.

உயரத்திலிருந்து போடப்படும் எந்த ஒரு பொருளும், எடை குறைவானதாகவோ அல்லது எடை கூடியதாகவோ இருந்தாலும் ஒரே நேரத்தில்தான் நிலத்தை வந்தடையும் என நிரூபித்தார்.

அவருக்குப் பின்னர் வந்த வானியல் ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள் எல்லோரும் கலிலியோவின் ஆராய்ச்சியையே அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். இவர் 1642 ஆம் ஆண்டு இறைபதம் எய்தினார்.

ச.சக்திபாலன்
தரம் -7
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.




# தன் கையே தனக்கு உதவி

காட்டுப்புறா ஒன்று தோட்டப்பகுதியில் கூடு கட்டி, முட்டை இட்டு குஞ்சுகள் பொரித்து வாழ்ந்து வந்தது. தோட்டக்காரன் திடீரென்று தோட்டத்துப் பயிரை அறுவடை செய்ய வந்துவிட்டால் தனக்கும், குஞ்சுகளுக்கும் ஆபத்து வந்துவிடுமோ என்று புறா அஞ்சியது.

எனவே அது தினமும் வெளியே உணவு தேடிப் பறந்து போவதற்கு முன்னர், தன் குஞ்சுகளிடம் 'தோட்டக்காரன் இந்தப் பக்கம் வந்தால், என்ன கதைத்துக் கொள்கிறார்கள் என்று கவனமாகக் கேட்டு என்னிடம் சொல்லுங்கள்', என்று சொல்லிவிட்டுப் போகும்.

ஒருநாள் தாய்ப்புறா உணவு தேடிக்கொண்டு, திரும்பி வந்தபோது.



குஞ்சுகள் -

''அம்மா இண்டைக்கு நீ சொன்னது நடந்துவிட்டது. அந்தத் தோட்டக்கார ஆள் வந்தார். தன்னுடைய மகனைப் பார்த்துத் தானியம் விளைந்துவிட்டது. அறுவடை செய்வதற்கு எமது நண்பர்களையும், உறவினர்களையும் அழைத்துக்கொண்டு நாளைக்கு வரவேண்டும்'' என்று சொன்னார்.

''நீ எங்களையெல்லாம் வேறு இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போய்விடு... நாளைக்குக் காலையில் தோட்டக்கார ஆள், உறவினர்களோடு அறுவடை செய்ய வந்துவிடுவார்''?

குஞ்சுகள் சொன்னதைக் கேட்ட தாய்ப்புறா, ''பயப்படாதீர்கள், அறுவடை இப்போது நடைபெறப்போவதாகத் தெரியவில்லை. தைரியமாக இருங்கள்'' என்று கூறியது.

அடுத்தநாள் உணவுடன் திரும்பி வந்தவுடன், 'தோட்டக்காரன் இன்று என்ன பேசினார்', என்று தாய்ப்புறா கேட்டது.

'தோட்டக்காரர் வந்தார். தன் உறவினர்களுக்காகவும், நண்பர்களுக்காகவும் காத்திருந்தார். யாருமே வரவில்லை. தன் மகனிடம் நாளைக்கு உன், மாமா, சித்தப்பா ஆகியோரை அழைத்து வந்து கதிர் அறுக்க வேண்டும் என்று சொன்னார்.' அம்மா! அதற்குள் நாம் இங்கிருந்து வேறு இடத்துக்குப் போய்விட வேண்டும்', என்று குஞ்சுகள் கூறின.

இதைக் கேட்ட தாய்ப்புறா, ''பயப்படாதீர்கள் நாளைக்கும் கதிர் அறுவடை நடக்காது'', என்று உறுதியாகச் சொல்லிவிட்டது.

மூன்றாவதுநாள் இரைதேடித் திரும்பிய தாய்ப்புறாவிடம், குஞ்சுகள், 'அம்மா இன்று தோட்டக்காரர் வந்தார். அவர் நினைத்தமாதிரி வேலை செய்ய சித்தப்பா, மாமா யாருமே முன் வரவில்லை. தோட்டக்காரர் தன் மகனிடம், மகனே இன்றைக்கும் வேலைக்கு யாருமே வரவில்லை.



கதிரும் நன்றாக விளைந்துவிட்டது. நண்பர்களையோ, உறவுக்காரர்களையோ, வேறு யாரையுமோ நம்பிப் பயனில்லை. நமது வேலையை நாமேதான் ஆரம்பித்து செய்து முடிக்கவேண்டும். அடுத்தவர்களை எதிர்பார்த்தால் வேலை நடக்காது. நாளைக்கு விடிகாலையில் நாமே வந்து அறுவடையை ஆரம்பித்து விடவேண்டும், என்று சொன்னார்', என்றன.

குஞ்சுகள் சொன்ன இந்த விபரங்களைக் கேட்ட தாய்ப்புறா, 'குழந்தைகளே' நாம் இங்கிருந்து புறப்படவேண்டிய நேரம் வந்துவிட்டது. இன்றைக்கே நாம் வேறு இடத்துக்குப் போய்விட வேண்டும். எவன் ஒருவன் பிறரை எதிர்பார்க்காமல் தன் கையே தனக்குதவி என்று தன் வேலையைத் தானே ஆரம்பிக்கத் திட்டமிடுகிறானோ, அன்றைக்கே அந்த வேலை உறுதியாகத் தொடங்கும்', என்று கூறியது, தன் குஞ்சுகளை. வேறு இடத்துக்குக் கொண்டு செல்வதற்கான, ஆயத்தங்களைப் பார்க்கத் தொடங்கியது.

## சுரைக்காய்க் கொடியும் துளசிச் செடியும்



சுரைக்காய்க்கொடி ஒன்று வீட்டின் கூரைமேல் படர்ந்திருந்தது. வீட்டின் பக்கத்தில் ஒரு துளசிச்செடி இருந்தது.


ஒருநாள் சுரைக்காய்க்கொடி, துளசிச் செடியைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்தது.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டது துளசிச்செடி.

'சிறிய செடியே! உன்னைக் கண்டு நான் இரக்கப்படுகின்றேன். சிறு காற்றடித்தாலும் நடுங்குகிறாய். என்னைப் பார், நான் வளர்ந்து எவ்வளவு உயரத்தில் இருக்கிறேன்!' என்று பெருமையாகப் பேசியது சுரைக்காய்க் கொடி.

'உண்மைதான்! நீ மிக உயரத்தில் இருப்பது எனக்குத் தெரிகிறது. அதைப்பற்றி நான் எதுவும் கூறவில்லை. ஆனால், நான் என் சொந்த வலிமையில் நிற்கிறேன். அந்த வீட்டுக்கூரையின் உதவியின்றி உன்னால் நிற்க முடியுமா? அது இல்லாவிட்டால் உன்னால் நிற்கக்கூட முடியாது. நீ படர ஏதாவது தேவைப்படுகிறது. அல்லாவிட்டால் நீ தரையில் படர்ந்துதான் செல்வாய் என்பதை மறக்காதே!' என்றது துளசிச்செடி. சுரைக்காய்க்கொடி ஒன்றும் சொல்லவில்லை. அதனால் என்ன பதில் சொல்ல முடியும்?

இடப்பக்கமிருக்கும் படங்களைப் பார்த்து வலப்பக்கமிருக்கும் படங்களை வரைந்து பூர்த்தி செய்யுங்கள்



# விளையாட்டு

### தொட்டால் போதும்

ஆட்டக்காரர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆடுகள அளவை, அமைப்பை (வட்டம் அல்லது சதுரம்) என்ற ரீதியில் அமைத்துக் கொள்ளவேண்டும்.

எல்லைக் கோட்டுக்கு வெளியே ஒருவரைத் துரத்திப் பிடிப்பதற்காக நிற்க வைத்துவிட்டு, ஏனைய எல்லா ஆட்டக்காரர்களையும் எல்லைக் கோட்டுக்குள்ளே நிற்க வைக்க வேண்டும்.

ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன் ஆட்டக்காரர்கள் குறிப்பாக ஒரு பொருளைத் தொட்டால் தான் தொடுவதிலிருந்து தப்பிக்க முடியும் என்று முன்னரே கதைத்துத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அது - ஒன்றில் மரம், புல், கல், தூண், சுவர் என ஏதாவது ஒன்றாக இருக்கலாம்.

துரத்தி வருபவர் மிகக் கிட்டவந்து விட்டால் அல்லது தொட்டு விடுவார் என்ற நிலையில் தப்புவதற்காக ஓடுபவர்கள் முன்னரே முடிவு செய்யப்பட்ட பொருளைத் தொட்டு விட்டால் அவர் தப்பிக் கொள்வார்.

முன்னரே முடிவு செய்யப்பட்ட பொருளைத் தொட முடியவில்லை என்றால், ஓடுவோரைத் துரத்தி வருபவர் தொட்டு விடுவார். இப்போது தொடப்பட்டவர் துரத்திப் பிடிப்பவராக மாற, விளையாட்டு முன்போல் தொடரும். சர்ச்சைகளைத் தவிர்க்க எந்தப் பொருளைத் தொட்டுத் தப்பிப்பது என்பதை முன்னரே விளக்கமாகக் கதைத்து முடிவு செய்து கொள்வது நல்லது.

# மூளைக்கு வேலை

1. 72 என்ற எண்ணை ஒரே எண்ணால் 4 முறை வகுக்க வேண்டும். அவ்வாறு வகுத்து வரும் 4 விடைகளைக் கூட்டினாலும் 72 வரவேண்டும். உங்களால் வகுத்துக் காட்ட முடியுமா?

2. 6 இலக்கம் கொண்ட ஒரு எண்ணை 7 ஆல் பெருக்க வேண்டும். பெருக்கி வரும் தொகையின் 6 எண்களும் ஒரே எண்ணாக இருக்க வேண்டும். அந்த எண்ணைக் கூறுங்கள்?

3. சில குதிரைப் பொம்மைகளும், ஒரு யானைப் பொம்மையும் மகேஷிடம் இருக்கின்றன. ஒரு தட்டில் இவற்றை அடுக்க வேண்டும். அதில் சில பொம்மைகளை மட்டுமே வைக்க முடியும். குதிரைப் பொம்மைகளை இடத்துக்கு ஒன்றாக வைத்தால் ஒரு குதிரைப் பொம்மைக்கும், யானைப் பொம்மைக்கும் இடம் இருக்காது. குதிரைப் பொம்மைகளை இடத்துக்கு இரண்டாக வைத்தால், யானைப் பொம்மையை வைக்க முடியும். எத்தனை இடங்கள், எத்தனை குதிரைப் பொம்மைகள் கூறுங்கள் பார்க்கலாம்?

## மூளைக்குவேலை சென்றவார விடைகள்

1. ரூபா 31, 500

| தொழிலாளர் | நாட்கள் | சம்பளம் |
|---|---|---|
| 42 | 12 | ரூபா 25, 200 |
| 35 | 18 | ? |


$? = \frac{35}{42} \times \frac{18}{12} \times 25200 = 31500$

2. சுரேஷின் எடை - 8 கிலோ

விநோதினியின் எடை - $8 \times 3 = 24$ கிலோ

தயாரின் எடை - $24 \times 3 = 72$ கிலோ

ஒவ்வொரு வரிசையில் உள்ள இரு உருக்களும் ஒரே விதமான எழுத்தில் ஆரம்பிக்குமாயின் ஆம் என்றும் இல்லையெனில் இல்லை என்றும் எழுதுங்கள்.





## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :......................................

கற்கும் பாடசாலை :......................................

கற்கும் தரம் :......................................

வீட்டு முகவரி :......................................

பிறந்த திகதி :......................................


ஆர்வமுள்ள துறைகள் :......................................

:......................................


............ திகதி ............ ஒப்பம்

............ அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ............ பெற்றோர் ஒப்பம்

## A இலிருந்து K வரையிலான எண்களை இணையுங்கள் பின்னர் வர்ணம் தீட்டுங்கள்



# நாம் அல்ல நான்



வழிப்போக்கர்கள் இருவர் சந்தித்துக் கொண்டனர். ஒருவர் வயதானவர். மற்றவன் இளைஞன். இருவரும் கதைத்துக்கொண்டே பயணம் புறப்பட்டார்கள். பணப்பை ஒன்று வழியில் கிடப்பதை இருவரும் கண்டார்கள்.

விரைந்து சென்று அந்தப் பணப்பையை எடுத்தான் இளைஞன். "நாம் இருவரும் இதில் உள்ளதைப் பகிர்ந்துகொள்வோம்" என்றார் வயதானவர்.

"இல்லை நான்தான் முதலில் இதைக் கண்டெடுத்தேன். இதில் உங்களுக்கு பங்கு எதுவும் தரமுடியாது. இதை நம்முடையது என்று சொல்லாதீர்கள். என்னுடையது தான்" என்று உறுதியுடன் சொன்னான் இளைஞன்.

வயதானவர் எதுவும் கூறவில்லை. இருவரும் சிறிது தூரம் அமைதியாக நடந்தார்கள்.

சிறிது தூரம் நடந்திருப்பார்கள். தூரத்தில் குதிரையில் வீரர்கள் சிலர் வேகமாக வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அருகில் வந்த அவர்கள் - உரத்த குரலில் அவர்களைப் பார்த்து "பணப்பையைத் திருடியது யார்?" என்று கத்தினார்கள்.

அஞ்சி நடுங்கிய இளைஞன் 'நாம் கண்டெடுத்த பணப்பை அரசனுடையது போல் உள்ளது. இதை எடுத்ததற்காக நமக்குக் கடும் தண்டனை கிடைக்கும் போல் உள்ளதே' என்றான்.

அதற்கு அந்த வயதானவர் "தண்டனை நமக்கு என்று சொல்லாதே. எனக்கு என்று சொல். அந்தப் பணப்பையைக் கண்டதும் நீதான் எடுத்ததும் நீதான்" என்றார்.


பணப்பையுடன் இருந்த இளைஞனை வீரர்கள் கண்டார்கள். விசாரணைக்காக அவனை அழைத்துச் சென்றார்கள்.



# புதிர்

கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளைக் கொண்டு 'இ' எழுத்தில் தொடங்கும் 10 வெவ்வேறு விடைகளைக் கண்டுபிடியுங்கள்

1. துருக்கி நாட்டின் முந்தைய தலைநகர்
2. இராவணனின் புதல்வன்
3. முட்டைகளை அடைகாத்து, குஞ்சு பொரிக்கச் செய்யும் இயந்திரம்
4. சிலப்பதிகாரத்தை இயற்றியவர்
5. எண்களை இப்படிக் கூறுவோம்
6. மனித உறுப்புகளில் மிக முக்கியமானது
7. முன்னாள் உகண்டா அதிபர்
8. சர்வதேச அளவில் இயங்கும் புகழ்பெற்ற ஒரு காவல்துறை
9. இதற்கு மயங்காதவர்கள் இல்லை
10. வீட்டிற்கு இன்னொரு பெயர்






# அண்ணாவும் தங்கையும்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

வீட்டுக்கு வந்து முகம் கழுவி தேனீர் பருகிய குழலி, சங்கர் அண்ணாவின் வரவுக்காய் காத்திருந்தாள். ஜிம்மியை நினைக்க கவலையாக இருந்தது. நேரமும் போய்க் கொண்டிருந்தது. சங்கர் அண்ணாவையும் காணவில்லை.

குழலி - அம்மா அண்ணா எங்க போனவர்.

அம்மா - என்னவோ வேலையிருக்கு தெண்டு சொல்லிப் போட்டுப் போனவன் அதுகள முடிச்சுக் கொண்டு தான் வருவான்.

(விறாந்தையில் சைக்கிள் சத்தம் கேட்டது. சங்கர் அண்ணா வந்து விட்டார். குழலி வாசலுக்கு ஓடிப் போனாள்)

அம்மா - இப்பதான் வாறான். முதல் போய் முகம் கை கால் கழுவிக் கொண்டு வரட்டும் பிறகு கதைக்கலாம் குழலி.

குழலி - சரி அம்மா அண்ணா கெதியாப் போய் முகம் கழுவிக் கொண்டு வாங்கோ.

சங்கர் - ஏன் குழலி?

குழலி - இப்ப சொல்லமாட்டன். முகம் கழுவின பிறகு சொல்லுறன்.



(சங்கர் அண்ணா முகம் கழுவி விட்டு வந்தார். அம்மா தேநீர் ரம்ளரை சங்கர் அண்ணாவின் கையில் கொடுத்தார்)

சங்கர் - சரி குழலி. இப்ப சொல்லு என்ன விஷயம்?

குழலி - பின்னேரம் பள்ளிக் கூடம் முடிஞ்சு வரேக்க ரதியின்ட மாமா வீட்ட போனநாங்கள். வழமையா அவயளின்ட நாய் ஜிம்மி, எங்களக் கண்டவுடன ஓடிவரும் ஆனா இண்டைக்கு வரேல்ல. ஏன் எண்டு மாமிட்ட கேக்க, அவ சொன்னா முந்தநாள் றோட்டில ஒரு சைக்கி லில ஜிம்மி அடிபட்டு பின் விறாந்தையில படுத் திருக்குதெண்டு...



சங்கர் - காயம் ஏதுமோ அல்லாட்டி?

குழலி - ஓம் அண்ணா காலில பெரிய காயம் தோல் பிஞ்சிருக்குது.


சங்கர் - நல்லா அடிபட்டுட்டுது போல இருக்குது.

குழலி - அண்ணா எங்களுக்கு காயம் வந்தா அம்மா மருந்து போட்டு விடுவா. காயம் ஆறிவிடும். ஜிம்மிக்கு மருந்து போடேல்லயோ எண்டு மாமியிட்ட கேட்டா, அவையள் சிரிக்கினம்.

சங்கர் - ஜிம்மி தன்ட காயத்தை அதுன்ட எச்சிலைக் கொண்டே ஆற்றிப் போடும்.

குழலி - எப்பிடி எச்சிலிலை காயம் ஆறும்

சங்கர் - நாய் மட்டுமல்ல, குழலி, எல்லா விலங்குகளுக்கும் இந்தப் பண்பு இருக்குது. அதுகளின்ட உடம்பில காயம் ஏற்பட்டா, அதுகள் தங்கட எச்சிலைக் கொண்டே காயத்தை ஆற்றிப்போடும். எல்லா பாலூட்டிகளின்ட உமிழ்நீர் சுரப்பிலயும் லைசோசைம் என்ற நொதியம் உள்ளது. இந்த நொதி பாக்றீரியாக்களை அழிக்கக் கூடியது. விலங்குகள் தங்களுக்கு காயம் ஏற்படேக்க, எச்சிலைக் கொண்டு நாக்கால காயத்தில தடவும். இந்தச் செயலால பக்றீரியா போன்ற நுண்கிருமிகள் காயத்துக்குள்ள நுழையாது. இது ஒரு விதத்தில விலங்குகள் தங்களைக் காத்துக் கொள்ளுற சுய வைத்திய முறை இதனால காயமும் விரைவில குணமாகும்.



குழலி - அது தான் ஜிம்மி தன்ட காயத்தை நக்கிக் கொண்டு இருந்தது.

சங்கர் - இன்னும் ரெண்டு மூன்று நாளில காயம் ஆறிவிடும். நீங்க போகேக்க அது ஓடிவரும்.

குழலி - யாழினி ரதியிட்ட இதைச் சொல்ல வேணும்.

அருகிலுள்ள படத்தில் ஆறு வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடியுங்கள்



ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

குற்றம் இயானாய்க் குடிசெய்து வாழ்வானை
சுற்றமாய்ச் சுற்றும் உலகு. திருக்குறள்

# நமது நோக்கு

## இந்த அரசுடன் சமாதானம் பேசல் சாத்தியமா?

அண்மையில் பல சந்தர்ப்பங்களில் இலங்கையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசானது தனது நிஜ சொரூபத்தை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தி வந்துள்ளதன் மூலம், இதுவரைகாலமும் உலகளாவிய ரீதியில் பொய்ப் பிரசாரங்கள் மூலம் தன்னை ஒரு பௌத்த தர்மத்தின் வழி இயங்கும் தார்மீக அரசாக காட்ட முனைந்த போலிநாடகம் குறித்த ஏமாற்றுத்தந்திரோபாயம் வெளிச்சத்திற்கு வரத்தொடங்கியுள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் நாளிலிருந்தே சிங்கள அரசியல் தலைமைகள் திட்டமிட்டு மேற்கொண்டுவந்த சிறுபான்மை சமூகத்தவர்களுக்கெதிரான - குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு எதிரான - இன மற்றும் மத அடிப்படையிலான அரச பயங்கரவாத ஒடுக்குமுறையின் கொடூரத்தையும், இராணுவரீதியில் ஆயுத முனையிலான அடக்குமுறைகளின் அகோரத்தையும் சுதந்திர இலங்கையில் விடுதலை நிராகரிக்கப்பட்ட இனமாக அரைநூற்றாண்டிற்கும் அதிகமான காலம் வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்கள் எவ்வாறெல்லாம் எதிர்கொள்ள நேர்ந்தது என்ற வரலாறு ஒரு காலகட்டம் வரை உலகுக்கு மறைக்கப்பட்ட ஒன்றாகவே இருந்தது.

சிங்கள பேரினவாத தலைமைகளின் அடக்கு முறைக்கும், அரசியல் ரீதியிலான ஒடுக்கு முறைக்கும் எதிராக தமிழ் மிதவாதத் தலைவர்கள் சாத்வீக அரசியல் அடிப்படையில் எதிர்ப்புக் குரல் எழுப்பி, அஹிம்சை அடிப்படையில் போராடமுற்பட்ட போதெல்லாம் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டனர்.

அப்போதெல்லாம் தமிழ் மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்கவோ, அவர்களுக்காகக் குரல் கொடுக்கவோ எவரும் முன்வந்தது கிடையாது.

1958 முதல் 1977 வரையான காலப்பகுதியில் சிங்கள பேரினவாத வெறியர்கள் அரங்கேற்றிய இனக்கலவரங்களின் இரத்தவெடில் கொண்ட வரலாறுகள் உலக சமுகத்தின் பார்வையில் சரியான கவனிப்பை பெறாமல் பாதுகாத்துக் கொண்டதில் பேரினவாதிகள் ஓரளவு வெற்றியைக் கண்டபோதிலும், 1983 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட இனக்கலவரம் உலகத்தின் கவனத்தை ஈர்க்கவே செய்தது. அதற்கு சாத்வீக ரீதியிலான தமிழரின் ஒன்று திரண்ட எதிர்ப்புக்குரலும் வேறுசில வெளிச்சக்திகளின் கண்டனமும் ஒரு காரணம் என்ற போதிலும், வேறுஒரு பிரதான காரணமும் உண்டு.

அது தமிழர்கள் அரச பயங்கரவாதத்தின் ஆயுத ரீதியிலான இன அழிப்பு நடவடிக்கையை ஆயுத முனையாலேயே எதிர்கொள்ள எடுத்த தீர்க்கதரிசனம் மிக்க, தவிர்க்க முடியாத முடிவேயாகும்.

குட்டக்குட்ட குனிந்து தம் தலைவிதியை எண்ணி நொந்து கொண்டிருந்த தமிழினம் தட்டிக்கேட்கவும், தேவைப்படின் திருப்பிக் குட்டித் துரத்தவும் தலைநிமிர்ந்த போது, அதற்கு பேரினவாதிகள் சூட்டிய பெயர்தான் பயங்கரவாதம் என்பதாகும்.

அரச பயங்கரவாத அராஜகங்களை எதிர்க்கவோ, தவிர்க்கவோ முடியாத சூழலில் தற்பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்திய தமிழர்கள் பயங்கரவாதிகள் என பிரசாரம் செய்யப்பட்டனர்.

அதன் பின்னரான இரு தசாப்தகால போர் - தமிழர்களைப் பொறுத்தவரையில் நியாயமான ஒரு தர்மயுத்தமாகவே அரச பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது என்பதே உண்மையாகும்.

இடையிடையே போரில் தோல்வியோ, பின்னடைவோ ஏற்படும் போதெல்லாம் சமாதானக் கரம் நீட்டிய அரசபயங்கரவாதத் தலைமைகள் தமிழர்களை ஏமாற்றி அதலபாதாலத்துள் தள்ளும் மூலோபாயங்களையே கடைப்பிடித்தனர். எனினும், தமிழர் தரப்பின் தலைமையை ஏற்றுக்கொண்டவிடுதலைப்புலிகள் விழிப்பாக இருந்ததால், இன்று தமிழினம் நிமிர்ந்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்பது உலகறிந்த உண்மையாகும்.

இன்றைய சமாதான காலமும் போர்முனையில் புலிகளுக்கு கிடைத்த வெற்றிகளின் அடிப்படையில் உருவான ஒன்றேயாகும்.

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாக அன்றி, தமிழர் தரப்பின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டே சர்வதேச சமூகம் அரசுடனான சமாதானப்பேச்சு வார்த்தைக்கு அனுசரணை வழங்கிவருகிறது. ஆனால், சிங்களப்பேரினவாதம் தொடர்ந்தும் தனது இனவெறிக்குணாம்சத்துடன் தான் இன்னமும் இருந்துவருகிறது என்பது கௌசல்யன் கொலையை நியாயபூர்வமான முறையில் கண்டித்த ஐக்கிய நாடுகள் சபை செயலாளரின் கூற்றுக்கு ஆட்சேபம் தெரிவித்ததன் மூலம் தெளிவாகத்தெரிகிறது.

சமாதானப் பேச்சுக்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக கூறும் அரசு - விடுதலைப்புலிகளை தொடர்ந்தும் பயங்கரவாதிகள் என்றே குறிப்பிடுவதானது அதன் நிஜமுகத்தை காட்டுவதாகவே உள்ளது.

ஏற்கெனவே இந்த அரசும், ஜனாதிபதியும் - கௌசல்யன் உட்படபலர் கொல்லப்பட்ட சம்பவத்தை அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என்றும், சமாதான விரோதிகளின் செயல்தான் இது என்றும் கண்டித்தபின்னரே, ஐ.நா.சபையின் செயலாளர் நாயகமும் இதனைக் கண்டித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமல்ல உலகின் பல நாடுகளும் பல ராஜதந்திரிகளும் கூட இப்படுகொலைகளை கண்டித்து அறிக்கை விடுத்திருந்தார்கள்.

இந்த நிலையில் ஹெலஉறுமய, ஜே.வி.பி, தேசப்பற்றாளர் இயக்கம் போன்ற சமாதான விரோத - போர் வெறிகொண்ட பேரினவாதிகளின் மிரட்டலுக்குப்பயந்து அவர்களைத்திருப்தி செய்யவே அரசு இந்த ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது என்பது உண்மையே.

இந்த நிலையில் இன்னமும் மூன்றாண்டு கால சமாதான சூழலின் பின்னரும் விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என கூறிநிற்கும் அரசுடன் சமாதானப் பேச்சுக்களை தொடர்வது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது.

சர்வதேச சமாதான அனுசரணையாளர்கள் தான் இது குறித்து யோசித்து இனி முடிவெடுக்கவேண்டும்.

# நாடும் நடப்பும்




# செய்திப்பார்வை...

## அமெரிக்காவுக்கு குல்லா போடமுனையும் ஜே.வி.பி. தலைவரின் குத்துக்கரணம்



ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க லண்டனுக்கு ஓடிப்போய் அங்கு முடங்கிக் கொண்டாரல்லவா? ஓடுவதற்கு முன்பு அவர் முதல் கைங்கரியமாக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றி லண்ஸ்ரீட்டைச் சந்தித்து, தமது கட்சி இது வரைகாலமும் அமெரிக்காவுக்கு எதிராகக் கக்கிவந்த அவதூறான கண்டன வார்த்தைகளுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார்.

அத்துடன், இனிமேல் அத்தகைய செயல்கள் எவற்றிலும் ஜே.வி.பி ஈடுபடமாட்டாது என்று சத்தியவாக்கும் அளித்தார்.

இந்தச் சந்திப்பு செய்தி ஊடகங்களுக்குக் கசியாது மிக அந்தரங்கமானதாக இருக்கவேண்டும் என்று சோமவன்ஸ அமரசிங்க கேட்டுக்கொண்டாராம். ஆனால், 'சண்டே லீடர்' எப்படியோ மோப்பம் பிடித்துக் கடந்தவார இதழில் அந்தச் செய்தியை விபரமாக வெளியிட்டுள்ளது.

ஒருமணி நேரம்வரை சோமவன்ஸ தூதுவருடன் கலந்துரையாடினார் என்று அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

அமெரிக்காவுக்கு எதிரான அவதூறான கண்டனக் கோஷங்கள், ஆவேசம்மிக்க ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள் அனைத்துக்கும் தமது கட்சியில் தனக்கு அடுத்த படியாக இருக்கும் சில தலைவர்களின் பிழையான கோட்பாடுகளும், வழிநடத்துதலும்தான் காரணம் என்று சோமவன்ஸ அப்போது தூதுவருக்கு விளக்கி, தன்மீது நம்பிக்கை வைத்திருக்கும் ஜே.வி.பி தோழர்களின் தோலை உரித்து எறிந்தார்.

அதுமட்டுமல்ல, அந்தத் தோழர்களுக்கு உள்நாட்டு அரசியல் பற்றிய அறிவு சிறிதும் இல்லை என்று சுட்டிக்காட்டி, அவர்களின் சதையையும் பிய்த்துவிட்டார்.

பல வருடங்களாக தனது இரத்தத்திலே ஊறிப்போன தறுதலைத் தனங்களை மறைப்பதற்கு சோமவன்ஸ தனது தோழர்களை இவ்வாறு காட்டிக்கொடுத்ததன்மூலம் ஒரு மணித்தியாலத்துக்குள் அவர் தன்னை ஒரு புனிதராக, ஜனநாயகவாதியாகக் காட்டிக்கொண்டார்.

ஜே.வி.பியினர் - ஐரோப்பிய நாடுகள், அன்னிய ஏகாதிபத்தியங்கள் எமது நாட்டின் வளங்களை அவை உறிஞ்சுகின்றன. எமது நாட்டுப் பிரச்சினைகள் எவற்றிலும் குறிப்பாக சமாதான முயற்சிகளில் அந்த அன்னியர்களின் தலையீடு இருக்கக்கூடாது என்று கத்திவந்தவர்கள். இத்தகைய கோஷங்கள் மூலமே சாதாரண பொது மக்களிடையே தமது கட்சியை வளர்த்தவர்கள். சமாதான முயற்சிக்காகப் பாடுபட்டுவரும் நோர்வே பிரதிநிதிகளை வெள்ளைப் புலிகள் என்று வர்ணித்து, அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்தவர்கள். இத்தகைய நிலையில், தன்னுடன் இப்போது உரையாடும் சோமவன்ஸ எப்படிப்பட்டவர், அவரது கட்சியும், தோழர்களும் எப்படிப்பட்டவர்கள், அவர்களது வரலாறு எப்படிப்பட்டது என்பதெல்லாம் அமெரிக்கத்தூதுவருக்குத் தெரியாதா?

எனவே அவர் பேசிக் கொண்டிருந்த சோமவன்சவை இடைமறித்து, சமாதான முயற்சிகளுக்கு உங்கள் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கிறதே என்று ஒரு குத்தல் போட்டார்.

திணறிப்போன சோமவன்ஸ சமாளித்துக் கொண்டு, விரைவில் எமது கட்சியின் கொள்கைகளை மறுசீரமைக்கப் போகின்றோம். அதன்பின் இந்தப் பிரச்சினையும் இல்லாமல் போக வழிபிறக்கும் என்று மெல்லென நழுவலாகக் கூறினார்.

அத்துடன் அந்த விடயத்திலிருந்து தூதுவரைத் திசை திருப்பி, அவரின் மனத்தைக் குளிரப் பண்ணுவதற்கு இப்படிக் கூறினார். எமது 'கட்சிக் கொள்கைகள்' மறுசீரமைக்கப்படும் போது அமெரிக்காவுக்கு எதிரான எத்தகைய கருத்துக்களும் அதில் இடம்பெறமாட்டாது. இது உறுதி.

அமெரிக்கத் தூதுவரை அவரது அலுவலகத்தில் கண்டவுடன் முதல் வேலையாக சோமவன்ஸ-அமெரிக்கா, சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேவை செய்வதற்காக ஹெலிகொப்ரர்கள் மற்றும் வாகனங்களை இலங்கைக்கு அனுப்பியதற்காக ஜே.வி.பியின் 'நன்றி ததும்பும்' நீண்ட கடிதத்தைக் கொடுத்தார்.

அமெரிக்காவே 'சரணம்' என்று வீழ்ந்து வணங்குவதற்கு முன்பு அமெரிக்கத் தூதுவரின் மனத்தைக் குளிரச் செய்யவே அந்தக் கடிதம். இவ்வளவு காலமும் அமெரிக்காவைத் திட்டு திட்டென்று திட்டிவளர்ந்தவர்கள்தானே ஜே.வி.பியினர்.

- செஞ்சேவற்கொடியோன்

## விமானசேவை அதிகாரி 20 லட்சம் ரூபா மோசடி!

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதாகக் கூறி, கட்டுநாயக்கா விமானநிலையத்தில் பெருமளவு பணத்தை சட்டவிரோதமாகப் பெற்றதாக உயரதிகாரி ஒருவர் குற்றச் சாட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இவர் இதுவரை சுமார் 20 லட்சம் ரூபாவரை இவ்வாறு பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவசர தேவைகளுக்காக விமானநிலையத்தில் சேர்த்துவைக்கப்பட்டிருந்த நிதியிலிருந்தே இந்தப்பணம் பெறப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் அதிகாரி இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ள அதேநேரம் பொது மக்கள் விமானசேவை திணைக்களத்தின் உயரதிகாரி என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (01)

### பதற்றத்தை தணிக்க

## நடவடிக்கையில் இறங்குமாறு கண்காணிப்புக்குழுவுக்கு பணிப்பு!

(ஒஸ்லோ)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் படுகொலைச் சம்பவம் குறித்து நோர்வே அரசாங்கம் அதிர்ச்சியும், கவலையும் வெளியிட்டிருப்பதாகவும் -

இந்தச் சம்பவத்தையடுத்து எழுந்திருக்கும் பதற்ற நிலையைத் தணிக்கும் நடவடிக்கையில் இறங்குமாறு போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவுக்கு நோர்வே அரசு பணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கௌசல்யனின் கொலையையடுத்து புலிகள் - இராணுவத் தரப்புக்களுக்கு இடையில் சந்திப்புகளை ஏற்படுத்தி, பதற்றத்தை தணிக்க நடவடிக்கை எடுக்குமாறு நோர்வே அரசாங்கம் கண்காணிப்புக் குழுவிடம் கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே அரசாங்கத்தின் வேண்டுகோளையடுத்து - யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, அம்பாறை மாவட்டங்களின் இராணுவக் கட்டளை அதிகாரிகளையும், புலிகளின் பிரமுகர்களையும் சந்திக்கவைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# வாசகர் நோக்கு

## பொம்மை வெளிக்கு மின்சாரம் கிடைக்குமா?

1995ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்குப் பின்னர், மக்கள் மீளக்குடியமர்ந்த காலப்பகுதியில் இருந்து இன்றுவரை பொம்மைவெளிப் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. முன்பிருந்த மின்கம்பங்கள் உடைந்து விட்டன.

தற்போது பொம்மைவெளியிலுள்ள பிரசவ விடுதியும் புனரமைப்பு செய்யப்பட்டுவருகிறது. இந்தப் பகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் பிரிவினரும் முகாமிட்டு இருக்கின்றனர். இரவுவேளைகளில் பிரயாணம் செய்வது மிகவும் ஆபத்தாகவுள்ளது.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு, சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து ஆவன செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

பொம்மைவெளி கிராமமக்கள் சார்பாக சுதா

பகுதி- 42 சங்கர்

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...




நான் போய் புட்டவிக்கிற ஏதனங்களைப் பாத்தன். தண்ணி வந்து அதுகளா போயித்து. அப்ப மகன் அம்மா இஞ்ச பாருங்கம்மா மீனுகளை எண்டு காட்டினான். நான் மீனப் பாப்பனா? சாமானுகளப் பாப்பனா? பாக்கெல்லாம் தண்ணிக்க - றாக்கி கெளிஞ்சிருக்கு. பாலன் குறோ சோடிச்சு வச்சிருந்த அதக கொண்டந்து கிச்சின் வாசல்ல வச்சிருக்கு.

அப்ப ரக்ரரில இயக்கம் மகள் மார ஏத்திக்கொண்டு வந்துது. அப்பாவக் காணயில்லயே எண்டு அவங்க கேக்கவும், பின்னுக்கு வந்திட்டா அவா எண்டு சில பேர் சொன்னாங்கள்.

அப்ப அவரப் பாருங்க ஒண்டு சேருவம் எண்டு சொல்ல, ஒரு பெடியன் வந்து சொன்னான். 'அப்பாட பொடி அங்க சிக்குப்பட்டுக் கிடக்குது. அப்பாட பாடு முடிஞ்சுது எண்டு சொல்ல, மகனும் ஒரு மகளும் அங்க ஓடினாங்க. தண்ணிக்க போக முடியாம நானும் மத்த மகளும் கத்திட்டுக் கிடக்கம். இவங்க இன்னும் ரெண்டு பேரப் பிடிச்சு பொடிய இந்தப் பள்ளிக்கூடத்துக்கு கொண்டு வந்தாங்க. முகமெல்லாம் சுரி. சோப்பு வாங்கிக் கழுவினாங்க. உடுப்பு போடவும் வழியில்ல. ரெண்டு கல் வீட்டயும் கடல் கொண்டு போயித்தே. ஒரு ஆளிட்ட இரவலாத்தான் வேட்டியும், சேட்டும் வேண்டிப் போட, திருப்பவும் அலை வருகுது எண்டு சொல்ல இயக்கம் எங்கள அனுப்பித்தாங்க.

ரக்ரரில் கொண்டு போய்த்தான் தாட்டாங்க இயக்கம். இப்ப இருக்கிறதுக்கும் இடம் எதுவும் இல்ல. ரெண்டு வீடும் போச்சுது. பள்ளிக்கூடத்தில கிடக்க வேண்டியிருக்கு. அலை வரக்க மகள் கோயிலுக்க நிண்டிருக்காவு. அவட மகளும் கூட இருந்திருக்காவு. அவ அம்மா காப்பாத்து, காப்பாத்து எண்டு கழுதத இறுக்கிப் புடிச்சுக் கொண்டு இருந்திருக்காவு. அப்ப தான் இயக்கதிட ரக்ரர் வந்து அவங்கள காப்பாத்தியிருக்கு. இவங்க புடிச்சித்து நிண்ட இடம் இப்ப கிணறு மாதிரி பாதாளமா இருக்கு. கோயில் பின் பக்கம் அப்பிடியே இடிஞ்சிருக்கு'.

குயிலின்பனின் அம்மாவிடம் இருந்து விடைபெற்று வருகையில், வேலுப்பிள்ளை பொன்னம்மா என்பவரைச் சந்தித்தோம். அவர் தனது அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார். அவருடனான உரையாடல் இது -

'நாங்க புள்ளையார் கோயிலுக்கு முன்னுக்கு ஆத்தங்கரைப் பக்கம் இருக்கிறம். எனக்கு 26 வயசில ஒரு மகள கடல் கொண்டு போயித்து'

'அவட பேர் என்ன?'

'தர்சினி. எங்கட குடும்பத்தில ரெண்டு பிள்ளையளும், மகனும், நானும் தான். என்ட மகளட புள்ளயும் நிண்டது அதோட கூட. புள்ளயார் கோயிலுக்கு முன்னுக்கு அறநெறிப் பள்ளிக் கூடத்தில என்னட மகன் படிப்பிக்கறவர். அவர் பள்ளிக்கூடம் போக அண்டைக்கு இந்தப் புள்ளயள் ஆத்தங்கரைப் பக்கம் போக வெளிக்கிடுதுகள் றால் கட்டப் போறம் எண்டு.

அப்ப நான் சொன்னன். நேத்து ஆத்துக்க தண்ணி இல்ல. இண்டைக்கு தண்ணி கொஞ்சம் கிடக்கு போகாதீங்க றொட்டி சுடுறன் சாப்பிடுங்க. பிறகு நானும் கூட வாறன் போவம் எண்டு. அப்ப இந்தப் புள்ள ஒளிச்சு ஒளிச்சுப் போகுது. அப்ப நான் கேட்டன் ஏன் புள்ள ஒளிச்சு ஒளிச்சுப் போற சொல்லச் சொல்ல எண்டு கேட்டுத்து பிசைஞ்ச மாவ மூடி வச்சித்து அடுத்த வீட்டு வளவுக்க போக, அலை வந்து அடிச்சு அப்பிடியே கொண்டு போயித்து' என்று கூறியவர் அதற்கு அப்பால் எதுவும் கூற முடியாது விக்கித்து நின்றார். அவரால் மீண்டும் இயல்புக்கு வர முடியவில்லை. அவரது மனக் கண்ணில் அந்தப் பயங்கரம் தொடர்ந்து நிழலாடியதால், அவரைத் தொந்தரவு செய்யாமல் விடை பெற்றோம்.

அங்கிருந்து வருகையில் தாய்லாந்தில் இருந்து கடலில் ஒதுங்கி வந்த தேரையும் பார்த்தோம். தொட்டம் தொட்டமாக கதிரவெளி, பால்சேனை என்று ஒவ்வொரு இடத்திலும் அமைந்திருந்த இடம்பெயர்ந்தோர் முகாம்களையும் பார்த்து விட்டு வந்தோம். கதிரவெளியில் உள்ள திலீபன் மருத்துவ மனையில் இருந்த முரளி என்னும் டொக்டரைச் சந்தித்து 'சுனாமிக்குப் பின்னரான வைத்திய சேவைகள் எப்படி உள்ளன?' என்று கேட்டேன்.

'சுனாமி அடித்த அடுத்த நாளே இங்கு வந்து விட்டோம். பால்சேனை, கதிரவெளி, கண்டலடி ஊரியன்கட்டு, தட்டமுனை, பனிச்சங்கேணி, ஆண்டான்குளம், தோணிதாட்டமடு முதலான இடங்களில் இடம்பெயர்சேவைகளை வழங்கி வருகின்றோம்.

இவ்வளவு இடங்களிலும் பணிபுரிவதற்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் உதவினர். பனிச்சங்கேணிப் பாலம் உடைந்திருந்ததால், எமது பணியே பிரதானமாகத் தேவைப்பட்டது. இந்த நிலையில் இங்கிலாந்தில் இருந்து டொக்டர் அரவிந்தன், டொக்டர் அருண்குமார் ஆகியோர் தாயகப் பற்றுடன் இங்கு வந்து, சேவை செய்ய முன்வந்தனர். இவர்களைத் தொடர்ந்து மலேசியாவில் இருந்து Malaysian Relief Task Forces என்ற பெயரில் 15 பேர் கொண்ட வைத்தியக் குழுவினர் இங்கு சேவை புரிந்தனர். இவர்களின் மூதாதையர் இலங்கைத் தமிழர்கள். டொக்டர் கணேசன், டொக்டர் பிறேமானந்த், பெண் டொக்டர் சீனா ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இங்கிலாந்தில் இருந்து வந்த மற்றொரு குழுவில் டொக்டர் ஈஸ்வரி, டொக்டர் தக்ஷனா ஆகியோருடன் டொக்டர் கெவின் தோமஸ், தாதி மே ஆகியோர் அடங்கியிருந்தனர். இவர்களுக்கான மருந்துகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில கிடைத்தன. இவர்களும் மருந்து கொண்டு வந்தனர்.

தொடர்ந்து நியூசிலாந்து மருத்துவக் குழு வந்தது. இதில் ஏழு பேர் அடங்கியிருந்தனர். அதில் டொக்டர் பிலி என்பவர் கடற்படையில் பணியாற்றியவர். தமிழ் டொக்டர் பீற்றர் என்பவரும் அடங்கியிருந்தார். இவர்களும் வரும்போது பெருமளவு மருந்துகளைக் கொண்டு வந்திருந்தனர்.

தற்போது வாகரை மருத்துவ மனையில் இத்தாலிய மருத்துவக் குழு தங்கியுள்ளது. 35 பேர் கொண்ட இந்தக் குழவில் பொது மருத்துவர் ஒருவர், பிரசவங்களைக் கவனிக்க ஒருவர், குழந்தை மருத்துவர் ஒருவர், சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவர் என நான்கு வைத்தியர்கள் அடங்கியுள்ளனர். இவர்கள் முன்னர் யுத்தம் நடந்த பொஸ்னியாவில் பணியாற்றியவர்கள்.

கதிரவெளியைப் பொறுத்தவரை திலீபன் மருத்துவமனை இங்குள்ள மக்களுக்கு உதவுகிறது. அத்துடன் நடமாடும் சேவைகளும் மேற்கொள்ளப்படுகிறது. லண்டனைப் பொறுத்தவரை எமது நடவடிக்கைகளுக்கு டொக்டர் சியாமளா பெரிதும் உதவியவர்'

இவ்வாறு தொடர்ச்சியாக கூறிச் சென்றவரிடம் 'இங்கு நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மக்களின் தேவைகள் குறித்து என்ன கூறுகின்றீர்கள்?' என்று கேட்டபோது 'மக்களை கல்வியில் நாட்டம் கொள்ள வைக்க அதிகூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதில் எமக்கு வெற்றி கிடைத்தால், ஏனைய விடயங்கள் சுலபமே. சமூக அமைப்புக்களில் காணப்படும் கோளாறுகளுக்கு இந்தப்பகுதி, கல்வியில் பின்தங்கியிருப்பதே காரணம். உதாரணமாக சில சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

(தொடரும்...)

கல்வியியல் ஆர்.கே.மேனன்.

# ஆசிரியர் சேவையிலுள்ளவர்களுக்கான உரிமைகளும், சலுகைகளும்

*(16.02.2005 திகதியில் வெளியான தொடர்ச்சி...)*

### ஓய்வூதியம் பெறுவதற்கான ஆகக் குறைந்த காலம்

✪ அரச ஊழியர் ஒருவர் ஓய்வூதியம் பெறுவதற்கு ஆகக்குறைந்தது 10 வருடகாலம் சேவை செய்திருக்கவேண்டும்.

எனினும் ஒரு அரச ஊழியர் 10 வருடச் சேவையைப் பூர்த்தி செய்ய முன்னர் மரணமடைந்தால் இருவரின் விதவை/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியங்களுக்கு உரிமை உடையவராவார்.

### மரணப் பணிக்கொடை

✪ ஒரு அரச ஊழியர் சேவையின்போது மரணமடைந்தால் பின்வரும் அடிப்படையில் மரணப் பணிக்கொடை வழங்கப்படும்.

அ. சேவைக்காலம் 5 வருடத்துக்குக் குறைவாயின், ஒருவருட சேவைக்கு ஒருமாதச் சம்பளம் என்ற அடிப்படையில்.

ஆ. சேவைக் காலம் 5 வருடத்துக்கு மேலும் 10 வருடத்துக்குக் குறைவாயின், 1 வருடச் சம்பளம் வழங்கப்படும்.

இ. சேவைக்காலம் 10 வருடத்துக்கு மேலானதாயின், கடைசி மாதச் சம்பளத்தின் 90 வீதத்தின் 24 மடங்கு ஆகும்.

### ஓய்வூதியத்துக்கான அளவீடு

✪ ஒவ்வொரு அரச ஊழியருககும் விதவைகள், தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணையவேண்டும். இந்தத் திட்டத்தில் இணைவதற்காக மாதாந்தம் பின்வரும் அடிப்படையில் பணம் - சம்பளப் பட்டியலில் இருந்து அறவிடப்படும்.

| வருட வேதனம் | கழிப்பனவு% |
|---|---|
| 45600 ரூபா வரை | 4% |
| 45601 ரூபாவுக்கு மேல் 70200 ரூபா வரை | 6% |
| 70201 ரூபாவுக்கு மேல் | 7% |

**குறிப்பு:-** 01.01.2003 ஆம் திகதிக்குப் பின்னர் அரச சேவையில் இணைந்த ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தில் மாற்றம் உண்டு. தற்போது ஊழியர் ஓய்வூதியத்துக்காக 8 வீதத்தைச் செலுத்த வேண்டும். அரசு ஊழியரின் சம்பளத்தில் 12 வீதம் இந்தத் திட்டத்துக்காக அரசு செலுத்தும்.

இளைப்பாறும்பொழுது சேவைக் காலம் முழுவதும் ஊழியர் செலுத்திய 8 வீதம் தொகை அரசு செலுத்திய 12 வீதம் தொகையும் கூட்டு வட்டியுடன் சேர்த்து ஊழியருக்கு வழங்கப்படும்.

### போக்குவரத்துச் செலவும் படிகளும்

✪ ஓர் ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படும்போதும், கடமையின் நிமித்தம் திணைக்களத் தலைவரால் அழைக்கப்படும்போதும், போக்குவரத்துச் செய்யும் ஏனைய படிகளையும் பெறும் உரிமை உடையவராவார்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குச் செல்லும்போதும், ஆசிரிய பயிற்சியின் பின்னர் மீளப் பாடசாலைக்கு நியமனம் பெறும்போதும் ஓர் ஆசிரியர் போக்குவரத்துச் செலவையும், ஏனைய இணைந்த படிகளையும் பெற உரிமை உடையவராவார்.

### இதற்காக வழங்கப்படும் படிகள் பின்வரும் அடிப்படையில் கணக்கிடப்படும்.

| வருடாந்த சம்பளம் | இணைந்த படிகள |
|---|---|
| 42720 ரூபா மட்டும் | 150 ரூபா |
| 42721 ரூபாவில் இருந்து 66300 ரூபா வரை | 180 ரூபா |
| 66301 ரூபாவில் இருந்து 118439 ரூபா வரை | 230 ரூபா |
| 118440 ரூபாவுக்கு மேல் | 280 ரூபா |

### அரசியல் உரிமை

ஆரம்ப வருடாந்த சம்பளம் 74160 ரூபா (அல்லது அதற்குக் கூடுதலானதாகவும்) வருடாந்த சம்பள உயர்ச்சி 1560 ரூபா (அல்லது அதற்குக் கூடுதலானதாகவும்) உள்ள அரச ஊழியர்கள் பதவிநிலை உத்தியோகத்தர்களாகக் கருதப்படுகின்றனர். பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு அரசியல் உரிமைகள் இல்லை.

எனவே பின்வரும் சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை இல்லை.

*அ. இலங்கை ஆசிரிய வகுப்பு I.*
*ஆ. இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு II தரம் I.*
*இ. இலங்கை அதிபர் சேவை வகுப்பு I, II, III.*
*ஈ. இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு I, II, III.*
*உ. இலங்கை ஆசிரியர் கல்வி சேவை வகுப்பு I, II, III.*

பின்வரும் சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை உண்டு.

*அ. இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு II தரம் 2.*
*ஆ. இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு III தரம் 1.*
*இ. இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு III தரம் 2.*

அரசியல் உரிமை உடையவர்கள் என்று கூறும்போது, இந்த ஆசிரியர்கள் -

*அ. அரசியல் கட்சிகளில் அங்கத்துவம் பெறலாம்.*
*ஆ. அரசியல் கட்சிகளை உருவாக்கலாம்.*
*இ. அரசியல் கட்சிகளின் பதவிகளை வகிக்கலாம்.*
*ஈ. அரசியல் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடலாம்.*
*உ. ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்; மாகாண சபைத் தேர்தல்; உள்ளூராட்சித் தேர்தல் போன்ற தேர்தல்களில் போட்டியிடலாம். பிரசாரம் செய்யலாம்; கருத்துத் தெரிவிக்கலாம்; துண்டுப் பிரசுரங்கள்; சுலோகங்கள்; கட்டுரைகள் எழுதலாம்; பிரசுரம் செய்யலாம்; பத்திரிகைகளில்; சஞ்சிகைகளில் வெளியிடலாம்.*

**குறிப்பு:-**

a:- அரசியல் உரிமை உடைய ஆசிரியர்கள் பாடசாலையை /வகுப்பறையை அரசியல் களமாக்கப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள்.

b:- தேர்தலில் பங்கு பற்ற விரும்பும் அரசியல் உரிமைகள் உடைய ஆசிரியர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கு ஒரு வாரம் முன்பாகவே விடுமுறையில் செல்ல வேண்டும். இதற்காக ஆசிரியர் வேட்பு மனுத்தாக்கல் செய்யும் இறுதி திகதிக்குப் பத்து (10) நாள் முன்னதாக அதிபர் ஊடாகக் கல்விப் பணிப்பாளருக்கு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும்.

c:- ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலில் மாகாண சபைத் தேர்தலில், வெற்றி பெறும் ஆசிரியர்கள் ஆசிரிய பதவியிலிருந்து இளைப்பாறப்படுவார்கள்.

d:- உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் இளைப்பாற வேண்டிய அவசியமில்லை. ஆசிரிய தொழிலையும் செய்து கொண்டு உள்ளூராட்சிமன்ற வேலையையும் கவனிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

பாடசாலை நேரத்தில் உள்ளூராட்சி மன்றக் கூட்டங்கள் நடந்தால் அல்லது அவசரத் தேவைகள் இருந்தால் சம்பளத்துடனான விடுமுறை வழங்கப்படும்.

e:- தேர்தலுக்காக ஆசிரியர், சொந்த விடுமுறையையும் பயன்படுத்தலாம். விடுமுறை இல்லாத பட்சத்தில் சம்பளமற்ற விடுமுறை வழங்கப்படும்.

### தொழிற்சங்கத்தில் இணையும் உரிமை

ஆசிரியர்கள் தாம் விரும்பும் தொழிற்சங்கத்தில் இணையும் உரிமையுண்டு.

ஆசிரியர்கள் விரும்பின், புதிய தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்கும் உரிமை உண்டு.

தொழிற்சங்கம் அழைக்கும்போது, தொழிற்சங்கப் போராட்டங்களில் பங்குபற்றும் உரிமையுண்டு.(தொடரும்)

# தவக்கால நற்சிந்தனை

**"நீங்கள் காண்பவற்றைக் காணும் வாய்ப்புப் பெற்றோர் பேறு பெற்றோர்".(லூக் - 10: 23)**



யேசுவை முதன் முதலாக்கி காணும் பேறு பெற்ற கண்கள் அன்னை மரியாளுடையது. அடுத்து அவரது வளர்ப்புத்தந்தை சூசை. அடுத்தது இடையர்கள். அடுத்ததாக ஆண்டவருடைய மெசியாவைக் காணும் முன் அவர் சாகப் போவதில்லை என்ற சிமியோன். பிறகு அன்னா என்னும் இறைவாக்கினர். இதனையடுத்து மூன்றுகீழ்த்திசை ஞானிகள். இவர்கள் கண்கள் எல்லாம் யேசுவைப் பிறப்பிலே காணும் பேறுபெற்றன. அவரை ஊடுருவிக் கண்டவர் பலர். இன்று ஊடுருவில் நாம் காணும்படி யேசு இல்லாவிட்டாலும், இன்னும் உலகம் முடியும்வரை நம்முடன் வாழ்கின்ற தேவனாக இருக்கின்றார். திருப்பலி பீடத்தில் அப்பம் உயர்த்தப்படும் போது யேசு முழுமையாக எழுந்தருளி நம்மத்தியில் இருக்கிறார். நாம் அவரை உற்று நோக்கினால், நம் கண்கள் பேறுபெற்றவை. அவர் வார்த்தையின் படி நடந்தால் வாழ்வு பெறுவோம். அதேவேளை அவர் தன்னை ஏழைகள், துன்புறுவோர், கைவிடப்பட்டோர், குழந்தைகள் இவர்கள் முகங்களில் காணும்படி அழைக்கிறார்.

- மோ. தார்சீசியஸ் -

## அமெரிக்காவுக்கு சவால்விடும் வடகொரிய ஏவுகணைகள்!

அமெரிக்காவுக்கு பெரும் சவாலாக இருக்கும் நாடுகளில் ஒன்று வடகொரியா. அமெரிக்காவுக்கு எதிராக ஏவுகணை தயாரிப்பதில் வடகொரியா கடந்த சில ஆண்டுகளாக தீவிரம் காட்டி வருகிறது. இதனைவிட அணுவாயுதங்களையும் வடகொரியா தயாரித்துள்ளது.

வடகொரியா 'டி.டி.2' என்ற அணு ஆயுத ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்துள்ளது. எந்த நேரத்திலும் இந்த ஏவுகணைகள் அமெரிக்காவைத் தாக்க தயார் நிலையில் உள்ளன.

அமெரிக்க உளவுத்துறையும் இதுபற்றி அமெரிக்க அரசை எச்சரித்துள்ளது. ஏற்கனவே ஈரான், சிரியா போன்ற நாடுகள் அமெரிக்காவுக்கு எதிராக ஒன்றாக இணைந்து செயற்பட முடிவுசெய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# அமெரிக்க புலனாய்வுத் துறைக்கு முதலாவது பணிப்பாளர் நியமனம்

அமெரிக்க புலனாய்வுத் துறையின் முதலாவது பணிப்பாளராக ஜோன் நிக்கரபொன்ட் (John Negroponte) என்பவரை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நியமித்துள்ளார்.

புலனாய்வுத்துறைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட ஜோன் தொழில்சார் இராஜதந்திரி என்பதுடன், தற்போது ஈராக்கிற்கான அமெரிக்கத் தூதுவராகவும் பணியாற்றி வருகின்றார்.

2001 ஆம் ஆண்டு உலக வர்த் தக மையம் தாக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு அமைக்கப்பட்ட குழு - அமெரிக்க புலனாய்வுத்துறையின் சகல பிரிவுகளுக்கும் பொறுப்பாக ஒருவரை நியமிக்குமாறு பரிந்துரை செய்திருந்தது. இந்தப் பரிந்துரையின் அடிப்படையிலேயே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்படி சி.ஐ.ஏ மற்றும் எவ்.பி.ஐ உட்பட அமெரிக்காவின் 15 புலனாய்வுத்துறை பிரிவுகளுக்கும் இவர் பொறுப்பாக இருப்பார்.


இவரது நியமனத்தின் பின்னர் அமெரிக்க அதிபர் புஷ் தெரிவிக்கையில் - அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் இந்தப் பதவியானது மிகவும் முக்கியமானது. பயங்கரவாதிகள் எம்மைத் தாக்குவதற்கு முன்னரேயே அதனை நிறுத்த வேண்டுமானால் எமது சகல புலனாய்வுத்துறைப் பிரிவுகளும் ஒருமித்து செயற்படவேண்டும்.

அமெரிக்காவின் உலகளாவிய புலனாய்வுத் துறையின் தேவைகளை ஜோன் நன்கு அறிந்துள்ளார். ஏனெனில், அவர் தனது வாழ்வின் பெரும்பகுதியை வெளிநாட்டு பணியிலேயே செலவிட்டவர் எனத் தெரிவித்தார்.

இந்தப் பதவியை ஏற்றுக்கொண்ட ஜோன் தனது 40 வருட அரச சேவையில் இந்தப் பதவியானது மிகவும் சவால்மிக்கதெனத் தெரிவித்தார்.

இவரது முதற்கட்டப் பணியாக அமெரிக்காவின் புலனாய்வுத்துறை தொடர்பான தகவல்களை மிகவும் சுருக்கமாக ஜனாதிபதி புஷ்ஷிற்குத் தெரிவிக்கவேண்டும். அத்துடன் புலனாய்வுத்துறைக்கான வரவு - செலவுத் திட்டத்தையும் தயாரிக்கவேண்டும்.

ஆனாலும் அமெரிக்க புலனாய்வுத் துறைக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பென்ரகன் இராணுவ புலனாய்வுத்துறை எண்



பது வீத கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. எனவே, ஜோன் தற்பொழுது புலனாய்வுத்துறைக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் சிக்கல்களை எதிர்கொள்வாரென ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

இந்தப் பதவியை பலருக்கு வழங்கவிருந்த போதிலும் அதனை அவர்கள் ஏற்கமறுத்துவிட்டனர். இதில் சி.ஐ.ஏயின் முன்னாள் தலைவரான றொபேட் ஹேரட்ஸிம் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் கடும் பனிப்பொழிவு சிறுவர்கள் உட்பட 1000 இற்கு மேல் பலி

ஆப்கானில் இடம்பெற்றுவரும் பனிப்பொழிவையடுத்து அங்கு ஏற்பட்டுள்ள கடும் குளிரினால் அண்மைய வாரங்களில்1000 இற்கும் அதிகமானோர் மரணமடைந்துள்ளதாகவும், ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடும் குளிரினால் 1000 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் மரணமடைந்துள்ளதாகவும் - இவர்களில் பெருமளவானோர் 5 வயதுக்குட்பட்டவர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான உணவு மற்றும் மருத்துவ வசதிகளை ஆப்கானின் மத்திய பகுதியிலிருந்து பெற்றுக்கொள்வதில் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாக உதவிப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த இடைவிடாத பனிப்பொழிவை அடுத்து ஏற்பட்ட குளிரினால் - சிறுவர்கள் சுவாசிக்க முடியாத நிலையிலும், நுரையீரல் வீங்கியும் மற்றும் கடுமையான இருமல் காரணமாகவுமே மரணமடைந்ததாக ஆப்கான் சுகாதார அமைச்சர் மொகமட் அமின் தெரிவித்தார்.

ஆப்கானில் சிறுவர்கள் 1000 பேர் நோயினாலும், மேலும் 160 பேர் பனிப்பாறைச் சரிவு



மற்றும் பனிப்பொழிவினால் ஏற்பட்ட விபத்துகளாலும் உயிரிழந்ததை உறுதிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடும் பனிப்பொழிவை அடுத்து ஆப்கானின் பல பிரதேசங்களின் போக்குவரத்து முற்றிலுமாக தடைப்பட்டுள்ளது. அப்பகுதிகளுக்கான உணவு மற்றும் மருந்து விநியோகம் வான் வழியாகவே நடைபெற்று வருகின்றன.

ஆனாலும், இந்தப் பிரதேசங்களையும் கண்டுபிடிப்பதில் தாம் பலத்த சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக ஐ.நா அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 2 இந்தோனேஷிய செய்தியாளர் ஈராக்கில் காணாமற்போயினர்!

இரண்டு இந்தோனேஷிய தொலைக்காட்சி செய்தியாளர் மற்றும் அவர்களது வாகனசாரதி என மூவர் ஈராக்கின் றமாடி அருகே கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து காணாமற்போயுள்ளதாக இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

காணாமற்போன இவர்களுடைய தொடர்பை தாம் இழந்துள்ளதாகவும், இவர்கள் எங்குள்ளனர் என்பதனைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சு பேச்சாளரான மார்டி நட்டலெகாவா தெரிவித்தார்.

காணாமற்போன இரண்டு செய்தியாளர்களில் ஒருவர் ஆண் எனவும், மற்றவர் பெண் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் வாடகைக் காரொன்றில் ஜோர்தானிலிருந்து பாக்தாத் நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளையே காணாமற்போனதாக நம்பப்படுகிறது.

இந்த வாடகைக்காரின் உரிமையாளர் தெரிவிக்கையில் -

சாரதி உட்பட மூவரும் காரில் பயணம்செய்துகொண்டிருந்தவேளை றமாடிஅருகே ஆயுதக் குழுவொன்றினால் தடுத்து நிறுத்தப்பட்டதாக தெரிவித்தார். இந்த இரண்டு செய்தியாளர்களும்



இந்தோனேஷிய மெற்றோ தொலைக்காட்சியில் பணிபுரிந்தவர்களாவர். கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து இவர்களது தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்தது.

இந்த இருவரும் கடத்தப்பட்டனர் என்ற வாக்கியத்தைப் பயன்படுத்த தாம் விரும்பவில்லையெனவும், இவர்கள் கிளர்ச்சிவாதிகளால் பிடிக்கப்பட்டிருக்கலாமெனவும் நட்டலெகாவா தெரிவித்தார். இத்தாலிய செய்தியாளரான கியூலியான செரினா என்பவரது வீடியோ நாடாவினை கிளர்ச்சிவாதிகள் வெளியிட்டுள்ளமையும் அவர் தனது விடுதலைக்கு உதவுமாறு அதில் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தொலைபேசி இணைப்புக்கள் மீளவும் நேபாளத்தில் துண்டிப்பு



(காத்மண்டு)

ஜனநாயக ஆதரவாளர்கள் நேபாள தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த நிலையில், மன்னர் க்யனேந்திரா தலைமையிலான நேபாள அரசாங்கம் நாட்டின் தொலைபேசி இணைப்புக்களைத் துண்டித்துள்ளது.

நடமாடும் தொலைத் தொடர்பு சேவைகள் கூட துண்டிக்கப்பட்டுள்ளதாக நேபாள தலைநகரிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் சார்லஸ் கவிலன்ட் தெரிவித்தார்.

நேபாளத்தில் தொடர்ந்தும் ஊடகத் தணிக்கை அமுலில் உள்ளது. நேபாள அதிகார சபையை விமர்சிப்பவர்கள் எவராக இருந்தாலும் கைது செய்யப்பட்டுவருகின்றனர்.

நேபாளத்துக்கு விஜயம்செய்த சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு - அங்கு மனித உரிமைகள் மிகவும் மோசமான வகையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவருவதுடன் இது அதிகரித்தும் வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளது. பொதுமக்கள் ஒருபுறம் படையினருக்கு அஞ்சியும், மறுபுறம் மாவோ கிளர்ச்சிவாதிகளுக்கு அஞ்சியும் இருதலைக்கொள்ளி நிலையில் வாழ்வதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை நேபாள மன்னர் கயனேந்திரா அந்த நாட்டில் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தை மீண்டும் ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தாவிட்டால் நேபாளத்துக்கான இராணுவ உதவிகள் நிறுத்தப்படுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அத்துடன் நேபாளத்திலுள்ள தமது தூதுவர்களை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா என்பன மீளத் திருப்பியழைத்துள்



ளன. நேபாளத்துக்கான உதவிகளை முதன் முதலாக டென்மார்க் அரசாங்கம் கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து நிறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# குண்டான உடலை குறைக்க இலகுவழி



எம்மில் பலர் உடல் பருத்துவிட்டால் அதைப் பெரிய குறையாக எண்ணி - சாப்பிடாமல் இருப்பதுடன், வைத்தியர்களின் ஆலோசனையைப் பெறுவதும் நடைப் பயிற்சிக் கருவிகள் வாங்கி நடந்தும் வருகிறார்கள்.

ஆனால், இவற்றையெல்லாம் விட வீதியில் சாதாரணமாக நடந்தாலே உடலின் அளவு கணிசமாகக் குறையும் என்று ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பலரது ஆலோசனைகளைப் பெற்று மேலும் உடல் பருமனைக் குறைக்க உடனே வீதியில் இறங்குங்கள் என்று இங்கிலாந்து இதய சிகிச்சை மையம் ஆலோசனை வழங்குகிறது. இந்தச் சிகிச்சை மைய அதிகாரிகள் நடத்திய ஆய்வில் ஆச்சரியமான உண்மை வெளியாகியுள்ளது.

தினமும் 10 ஆயிரம் காலடி தூரம் (8 கிலோ மீற்றர்) நடக்கவேண்டும் என்று மனதில் கணக்குப் போடவேண்டும். ஆனால், இதைநிறைவேற்ற முடியாது. குறைந்தது 4 ஆயிரம் காலடி தூரம் (3.2 கிலோமீற்றர்) சென்றால் கூடப்போதும். தினமும் இந்த நடைப் பயிற்சி செய்தால் ஆண்டுக்கு 10 கிலோ எடை குறையும் என்று ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்காகத் தனியாக சப்பாத்து மற்றும் ஜீன்ஸ் தேடி ஓடவேண்டாம். கார், சைக்கிள் வைத்திருப்பவர்கள் தினமும் காலையில் எழுந்தது முதல் - வீட்டில் ஒவ்வொரு அறைக்கும் நடக்கும் காலடிகளைக் கணக்கிடுங்கள். கார், சைக்கிளை அலுவலகத் தரிப்பிடத்தில் தூரமாக நிறுத்திவிட்டு அலுவலகப்படிகளில் ஏறி இறங்குங்கள். இப்படி எல்லா விடயங்களிலும் நடந்தாலே போதும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

தினமும் நடப்பதால் தொந்திகுறையும், கொழுப்பு கட்டுப்பாட்டுக்குள் வந்து இதயத் துடிப்பு சீராகும், இரத்த அழுத்தம் சீராகும், எலும்புகளின் பலம் அதிகரிக்கும், மன உளைச்சல் குறையும், வயதானவர்களுக்குத் தள்ளாட்டம் அறவே நீ ங்கும், சுறுசுறுப்பாக வேலை பார்க்க முடியும். ஆகிய நன்மைகள் இருப்பதாக சிகிச்சை மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகளுடன் இணைந்து செயற்படுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## சுவீடனிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

தமிழர் பகுதிகளில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று சுவீடன் அமைச்சரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சர்வதேச அபிவிருத்திகளுக்கான சுவீடிஷ் அமைச்சர் கரின்ஜாம்டினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் -

சுவீடன் நாட்டின் அபிவிருத்தி அமைசசரும் அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் வந்திருந்தனர்.

அவர்களுடனான சந்திப்பின் போது, கடந்த வருடம் டிசெம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி வடக்கு - கிழக்கு மாகாணங்களாகும். உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் அறிக்கையின் அடிப்படையில் ஏறத்தாழ 71 சதவீதமான அழிவுகள் இந்தப் பகுதியில்தான் ஏற்பட்டிருக்கின்றன. அங்கு நிவாரணம் மற்றும் மீளக் கட்டியெழுப்புதல், மீள்குடியிருப்பு ஆகியவற்றை மேற்கொள்வதற்காக ஒரு புதிய கட்டமைப்பு ஏற்ப்டுத்தப்படவேண்டும் என்றும் எடுத்துக் கூறினோம்.

அந்தக் கட்டமைப்பில் விடுதலைப் புலிகள் இணைக்கப்பட்டு, அவர்களுடன் அரசு இணைந்து திட்டங்களை முழுமையாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கான அழுத்தத்தை சுவீடன் அரசாங்கமும் சர்வதேச சமூகமும் அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

அதுமட்டுமன்றி இந்தப் பகுதிகளில் முக்கியமாகப் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்கள் என்றும், இந்த மீனவர்களுடைய எதிர்காலம் சம்பந்தமாகக் கரிசனை செலுத்தி, அழிவுகளை முழுமையாக கணக்கெடுக்கவேண்டும் என்றும் நாம் வலியுறுத்திக் கூறினோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### அடையாள அட்டை நடமாடும் சேவை

சுனாமியின்போது அடையாள அட்டைகளை இழந்தோருக்கான அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவை இன்றும், நாளையும் கிளிநொச்சியிலும் திருகோணமலையிலும் இடம்பெறவுள்ளன.

ஆட்பதிவுத் திணைக்களம் இதனை முழுமையாக இலவசமாக நடத்துகிறது.

எனவே, சுனாமியின்போது தமது அடையாள அட்டைகளை இழந்தவர்கள் இந்த இருநாள் நிகழ்வுகளின்போது பயனை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (01)

## காத்தான்குடி - ஒலுவிலில்

# அரசாங்கத்துக்கு எதிராக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள காத்தன்குடி முஸ்லிம்கள் ஆறு கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அரசாங்கத்தால் அமுல்படுத்தப்படவிருக்கும் கரையோரப் பாதுகாப்புத் திட்டம், தங்களது வாழ்வுரிமையைப் பறிப்பதாக குற்றம் சுமத்திய பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் - அரசாங்கத்தால் அமுல்படுத்தப்படவிருக்கும் புதிய கரையோரப் பாதுகாப்புத் திட்டத்துக்கு எதிராகவும் நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடற்கரையிலிருந்து 100 மீற்றர், 200 மீற்றர் பாதுகாப்பு வலயத் திட்டத்தை அரசாங்கம் கைவிடவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான மாற்றுத்திட்டங்கள் பற்றி அந்தப் பிரதேச மக்களுடன் பேசி முடிவெடுக்க வேண்டும்.

இனரீதியான பாகுபாடுகளையும் பாரபட்சங்களையும் அரசாங்கம் கைவிடவேண்டும். எமது வாழ்விடங்கள் பற்றிய அடையாளங்களை துடைத்தெறியும் நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டன.

பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை நண்பகல் ஜும்மா தொழுகையை முடித்த பின்னர், ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து அதற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் மீள்கட்டுமானப் பணிகளில் முஸ்லிம்களின் தனித்துவத்தை வலியுறுத்தி, நேற்று அம்பாறை ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

பல்கலைக்கழக முன்றலில் கூடிய மாணவர்கள், ஒலுவில் சந்தி வரை ஆர்ப்பாட்டப் பேரணியொன்றையும் நடத்தினர்.

'நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்கே?', 'அமைச்சர்கள் எங்கே?', 'இலங்கை அரசே மீள்கட்டுமானப் பணிகளில் பாரபட்சம் காட்டாதே?', 'சுனாமி அனர்த்தத்தால் வீடு வாசல்களை இழந்தவர்களின் வாழ்வுரிமையைப் பறிக்காதே' ஆகிய சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை இவர்கள் ஏந்தியிருந்தனர்.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தின் போது காத்தான்குடி பிரதேச முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்டிருந்த சகல கோரிக்கைகளையும் இவர்களும் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (07)

# சர்வதேச உதவிகளை எதிர்க்கட்சி தடுக்கிறது!

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

சர்வதேச உதவிகளைத் தடுக்கும் முயற்சிகளில் எதிர்க்கட்சியினர் ஈடுபட்டு வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

ஹிளிதுமவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இந்தக் குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார்.

அங்கு மேலும் உரை நிகழ்த்திய அவர் -

சுனாமியால் உயிரிழந்தோரை வைத்து எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அரசியல் நடத்த முனைகின்றனர். அததுடன் உள்ளூர் பத்திரிகைகள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டுவருகின்றன. இதனால் அவற்றை நான் இப்பொழுது வாசிப்பதில்லை.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்படப் போவதாகக் கூறும் எதிர்க்கட்சியினர், ஐக்கிய நாடுகள் சபையிடமும், சர்வதேச இராஜதந்திரிகளிடமும் இலங்கைக்கான உதவிகளை நிறுத்துமாறு கோரி வருகின்றனர்.

அரச சார்பற்ற நிறுவனம் ஐரோப்பாவில் 600 மில்லியன் அமெரிக்க டொலர்களை சேகரித்துள்ளதாகவும் ஆனால், அதில் ஒரு சிறுபகுதி கூட தமக்கு வழங்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

### திங்களன்று...

அத்துடன், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட காலி, மாத்தறை, அம்பாறை, யாழ்ப்பாணம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளையும் அவர் நேரில் பார்வையிடவுள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் பூர்த்தியடைவதை முன்னிட்டு கொழும்பில் நடைபெறும் கருத்தரங்கு ஒன்றிலும் சொல்ஹெய்ம் உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பொலிஸ்...

வப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளைக் கைதுசெய்தது தொடர்பாகவும் பத்துக் குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

முன்னாள் இராணுவத் தளபதி லயனல பலகல்ல மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக அவர் குறறம் சுமத்தியது தொடர்பாக மேலும் எட்டுக் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் 60 சாட்சிகள் சாட்சியமளிக்கவுள்ளனர். முன்னாள் இராணுவத்தளபதி லயனல் பலகல்ல, முன்னாள் பொலிஸ் மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராசா ஆகியோர் சாட்சிகளில் அடங்குவர். இந்த வழக்கினை நேற்று சட்ட மா அதிபர் தாககல செய்தார்.

### உயர் பாதுகாப்பு...

விரைவில் நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்படும் என்றும் அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்திருந்தார்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலுள்ள காணிகளைச் சுவீகரிப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு கட்டமாகவே இந்தத் திருத்தச்சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் உயர் பாதுகாப்புவலயப் பகுதிகளில் காணிகளைக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை உருவாகும் என எச்சரிக்கப்படுகிறது. (01)

# புளொட் உறுப்பினர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

புளொட் உறுப்பினர் பயணம் செய்த வாகனம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 8.20 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் படுகாயமுற்ற புளொட் உறுப்பினர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காயமடைந்தவர் பாபு எனும் இயக்கப் பெயரைக் கொண்ட அன்னாசி பாக்கியராசா (வயது 38) என்ற புளொட் உறுப்பினர் என தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவிலிருந்து மதவாச்சி நோக்கிச் சென்றுகொண்டிருந்த எல்ப் ட்றக் வாகனத்தை செலுத்திச் சென்ற இந்த புளொட் உறுப்பினர் மீது வானொன்றில் பின்தொடர்ந்து வந்தவர்களே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக விசாரணையின்போது தெரியவருவதாக வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

பூவோயா பாலத்திற்கு அருகில் வைத்தே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், சம்மந்தப்பட்ட வான் தப்பிச்சென்றுவிட்டதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

சிங்களப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கான காரணம் இதுவரை வெளிவரவில்லை. (03)

# கிளின்டன் – புஷ் குழு வட – கிழக்குக்கு வராது

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு நாளை கொழும்பு வரவுள்ள அமெரிக்க முனனாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ் (சீனியர்) மற்றும் கிளின்ரன் ஆகியோர் வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்லமாட்டார்களென கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பிரதேசங்களைப் பார்வையிடும் வகையில் - நாளையும், நாளை மறுதினமும் இலங்கைக்கு இரண்டு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளையும் விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி புஷ் கேட்டிருந்தார்.

இதன்படி இவர்கள் இருவரும் நாளை மாலை கொழும்பை வந்தடைவர். பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இவர்கள் பேச்சுக்களை நடத்துவர். இதன் பின்னர் நாளை மறுதினம் காலை இவர்கள் இருவரும் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதி நகரான மாத்தறையை சென்று பார்வையிடுவர். பின்னர் அன்றைய தினமே சுனாமியால் பாதிக்கப்பட்ட மாலைதீவுக்கு விஜயம் மேற்கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 76 ஆவது வயதில் மரண தண்டனை

(காலி)

1986 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலை ஒன்று தொடர்பாக 76 வயதான ஒருவருக்கு மரண தண்டனை தீர்ப்பு விதிக்கப்பட்டுள்ளது. காலி நீதிமன்றம் இந்த தண்டனையை விதித்துள்ளது.

### புலிகளின்...

யளவில் கிளிநொச்சி பொது மைதானத்தில் தரையிறங்கினர்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான இந்தக் குழுவில் - தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி, நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மூத்த உறுப்பினர் பாலகுமாரன் மற்றும் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஆகியோரே கிளிநொச்சி திரும்பினர்.

வெலிக்கந்தவில் படுகொலை செய்யப்பட்ட லெப்.கேணல் கௌசல்யன் உள்ளிட்ட போராளிகளின் இறுதி நிகழ்வில் பங்கேற்பதற்காகச் சென்ற இவர்கள், அங்கு பல் வேறு இடங்களையும் பார்வையிட்டதுடன், முக்கிய சந்திப்புக்களிலும் பங்கேற்றிருந்தனர்.

இதன்பின் திருமலை - சம்பூருக்குச் சென்று அங்கிருந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட வாகரைப் பகுதிகளையும் பார்வையிட்ட பின்னரே இந்தக் குழுவினர் நேற்று கிளிநொச்சி திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

### அரசின்...

நிதிகள் கலந்துகொண்ட கூட்டத்திலேயேஅவர் இவ்வாறு தெரிவித்தார். இதேவேளை, நேற்று திருகோணமலை மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் ஒன்றிலும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பங்குபற்றினார்.

முஸ்லிம் பிரதிநிதிகள் மத்தியில் கருத்துத் தெரிவித்த சு.ப. தமிழ்ச்செல்வன், உறவு ரீதியாக இணைந்து செயற்படுவதன் மூலமே ஒட்டுமொத்த தமிழினத்தின் இலக்கை அடையமுடியுமென்றும் குறிப்பிட்டார். (10)

சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட Japan Sony, T.V க்கள் (19",20",21", 25",29", Q.21, T.21) மற்றும் VEDIO டெக், செட்டப் ரேடியோக்கள், (Sony, Pioneer, Kenwood) RX, FH ரேடியோக்கள், அம்பிளிபயர் என்பன மலிவான விலையில் உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு.

சன் மல்டி ரேட் சென்டர்

150, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P : 222 7442
(C/3825)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.02.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 50 வீடுகள், 4 மைதானங்கள்

# வடக்கில் அமைத்துக் கொடுக்க உதைபந்தாட்ட சம்மேளனம் உறுதி



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஐம்பது குடும்பங்களுக்குப் புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்போவதாகவும், யாழ். மாவட்டத்தில் நான்கு உதைபந்தாட்ட மைதானங்கள் அமைத்துத் தருவதாகவும் - ஆசிய உதைபந்தாட்ட சம்மேளன உபதலைவர் வி. மணிலால் பெர்னாண்டோ உறுதியளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்.குடாநாட்டுக்கு வருகைதந்த ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவர், யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்கைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வட-கிழக்கு மாகாணத்தில் உதைபந்தாட்டத்தை மிகவும் சிறப்பாக வளர்க்கவேண்டும் என்று எனக்கு மிகவும் ஆர்வம் உண்டு. இதற்கு ஒரு கரம் போதாது. இரண்டு கரங்களும் சேரவேண்டும். இங்கு வருவதற்கு முன்பு மட்டக்களப்பு, மன்னார் போன்ற இடங்களுக்கும் நான் சென்று, உதைபந்தாட்ட வளர்ச்சி தொடர்பாக ஆராய்ந்தேன்.

யாழ். மாவட்டத்தில் நான்கு உதைபந்தாட்ட மைதானங்களை அமைப்பதற்கான நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக இரண்டு மைதானங்களைத் தெரிவு செய்தால் அதற்கு நிதியுதவி வழங்கப்படும். இந்த இரண்டினது பணிகள் முடிந்ததும் மேலும் இரண்டு உதைபந்தாட்ட மைதானங்களை அமைத்துத் தர முடியும்.

இதைவிட எதிர்வரும் 21 ஆம் திகதி கிளிநொச்சிக்குச் சென்று அங்கு அரசியற் பிரமுகர்களையும், விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளேன். இவர்கள் மூலமாகவே முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கவுள்ளோம்.

யாழ். மாவட்டத்தில் இருந்து இரண்டு வீரர்கள் தேசிய அணிக்குத் தெரிவுசெய்வதற்கான பயிற்சிகளை விரைவில் நடத்தவுள்ளோம். இவர்கள் நிச்சயம் தேசிய அணியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

வடக்கு - கிழக்கு உதைபந்தாட்ட வீரர்கள் சர்வதேச ரீதியிலும் தமது புகழைப் பரப்பவேண்டும். இதுவே எனது ஆவல். சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும் விளையாட்டுப் பொருட்கள் வழங்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## செஞ்சிலுவைச் சங்க கிளைகள் விரைவில் திறப்பதற்கு ஏற்பாடு

(மானிப்பாய்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அலகுக்கிளைகள் விரைவில் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, சங்கத்தின் செயலாளர் இ.மயில்வாகனம் தெரிவித்தார்.

இதன்படி அதன் கிளை நிறுவனங்களை உரும்பிராய், அச்சுவேலி, கோப்பாய், இருபாலை, புத்தூர், ஆவரங்கால், வளலாய் ஆகிய இடங்களில் முதற்கட்டமாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (100)

# சைவசமய அறிவுப் பரீட்சை நாளை நடைபெறவுள்ளது!

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை நாளை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கென குடாநாட்டில் யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, நயினாதீவு மகா வித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம், கொட்டடி நமசிவாய வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கோப்பாய் நாவலர் வித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி, சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம் ஆகிய 18 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தரம் 1 தொடக்கம் 13 வரையிலான வகுப்புகளைச் சேர்ந்த 4250 மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கழகத்தின் செயலாளர் சு.ஸ்ரீகாந்தன் அறிவித்துள்ளார்.

# கிராமிய கைத்தொழில்களை அமைச்சில் பதிய நடவடிக்கை

சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு நாட்டில் உள்ள அனைத்து சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சால் நாடளாவிய ரீதியில் முதல் முறையாக இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. பதிவுகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் வடமாகாண காரியாலயத்துக்கு அமைச்சால் அனுப்பப்பட்டுள்ளதாகவும், இந்த விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாள் ரி.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

எனவே எதிர்வரும் புதன்கிழமை முதல் கைத்தொழிலாளர்கள் தத்தமது பிரதேச செயலகங்களில் இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து கையளிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நல்லூர் புனித யாக்கோபு ஆலய

# 175 ஆவது ஆண்டு நிறைவு; மலர் வெளியீட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் - முத்திரைச்சந்தி செம்மணி வீதியில் அமைந்துள்ள புனித யாக்கோபு ஆலயத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா - இன்று மாலை 4 மணிக்கு ஆலயத்தின் மண்டபத்தில் மலர்க் குழுத்தலைவர் எஸ். புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவின் பிரதம விருந்தினராக யாழ். குருமுதல்வர் அருட்பணி எஸ். நேசக்குமாரும், சிறப்பு விருந்தினராக பதுளை புனித மாற்கு ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி தோமஸ் ஜோர்ஜ் அடிகளாரும், கௌரவ விருந்தினராக அகவொளியின் இயக்குநர் அருட்திரு எஸ்.ஜே.இராஜநாயகம் அடிகளார் மற்றும் யாழ். தொழிநுட்பக் கல்லூரி இயக்குநர் என்.ஆர்.ஜீ.கூல் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலின் நயப்புரையை - பளை கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.இராசலிங்கமும், மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக பகுதி நேர விரிவுரையாளர் எம்.வித்தியானந்த நேசனும், ஏற்புரையை மலர் ஆசிரியர் தனேந்திராவும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த ஆலயத்தின் வரலாற்றுப் பதிவை அதன் ஆசிரியர் வி.தனேந்திரா சேகரித்து புத்தக வடிவாக்கியுள்ளார்.

அழகிய வர்ணப் பதிப்புடன் கூடிய புகைப்படங்களுடன் வெளிவந்திருக்கும் இந்தப் புத்தகம் - ஆலய அங்கத்தவர்களுக்கு 100 ரூபாவாகவும், வெளியாருக்கு 200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (100)

# நாயன்மார்கட்டுப் பகுதியில் இரவில் தடைப்படும் மின்சாரம்

(மானிப்பாய்)

செம்மணி வீதி, நாயன்மார்கட்டுப் பகுதியில் அண்மைக்காலமாக இரவு வேளைகளில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இரவு 8 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் மின்சாரம் தடைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்தப் பகுதிகளில் திருடர் நடமாட்டம் அதிகரிப்பதாகவும் அந்தப் பகுதி பொதுமக்கள் அச்சம் தெரிவித்தனர்.

இதேவேளை - இரவு வேளைகளில் இந்தப் பகுதியில் திருட்டு மின்சாரம் பெறுபவர்களால் பாவனையாளர்களுக்கு வலுக்குறைந்த மின்சாரம் கிடைப்பதாகவும், மின்சாரம் தடைப்படுவதால் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுவதாக பெற்றோர் கவலை தெரிவித்தனர். (100)

# நெடுந்தீவுக்கான தேவைகள் குறித்து யாழ். அரச அதிபர் ஆராய்வு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச மக்களின் தேவைகள், அபிவிருத்திக்கான திட்டங்கள் தொடர்பாக அரச அதிபர் கே.கணேஷ் கடந்தவாரம் நெடுந்தீவுக்குச் சென்று ஆராய்ந்தார்.

நெடுந்தீவு பிரதான வீதி திருத்தம், மின்சார வசதிகளை விஸ்தரித்தல், சீரான படகு சேவை, நெடுந்தீவு வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்றன பற்றி கலந்துரையாடப்பட்டது. (113)

# சுழிபுரம் கடற்தொழிலாளருக்கு உலர் உணவு விநியோகம்!

(சுழிபுரம்)

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் 150 பேருக்கு ஜேர்மனியில் வசித்துவரும் க.நல்லநாதன், மகிந்தா, ஹமிலஸ் ஆகியோர் உலர் உணவு வழங்கினர்.

யாழ்ப்பாணம் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் சிபார்சின் பேரில் பிரவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள கல்வாரி பூரண சுவிசேச தேவாலயத்தைச் சேர்ந்த சபையினர் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

க.குலசிங்கம் தலைமையில் கடந்த புதன்கிழமையன்று உலர் உணவுப் பொருட்கள் சுழிபுரத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இது பற்றி க.நல்லநாதன் கருத்துத் தெரிவிக்கையில் -

இங்கு ஏற்பட்ட பாதிப்பு காரணமாக இந்த உலர் உணவுகளைத் தாங்கள் வழங்குவதாகவும், ஜேர்மனிக்குச் சென்றபின் மேலும் உதவிகள் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார். (48)

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஓவியக்கண்காட்சி விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் சுனாமி ஓவியக் கண்காட்சிக்கான முடிவு திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஓவியங்களை அனுப்பாத மாணவர்கள் உடனடியாக வரைந்து, பாடசாலைகளில் உள்ள விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து அதிபரின் உறுதிப்படுத்தலுடன் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (101)

## பாவனைக்குதவாத பாண் அழிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று திடீர் பரிசோதனையை மேற்கொண்ட சுகாதாரப் பரிசோதகர்கள் குழு, கொழும்புத்துறை பகுதியிலுள்ள வெதுப்பகம் ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மனித பாவனைக்குதவாத 80 இறாத்தல் பாணைக் கைப்பற்றி, உரிமையாளரின் பூரண சம்மதத்தோடு அவற்றை அழித்துள்ளதோடு, விற்பனையாளரையும் எச்சரிக்கை செய்துள்ளனர். •

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் சகல பிரிவுகளையும் சேர்ந்த தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு, யாழ்.செஞ்சிலுவைச் சங்க கிளைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையடலில் சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளும்படி அதன் செயலாளர் ரி.உதயசூரியன் தெரிவித்தார்.(100)

## மணற்காட்டில் நினைவுத்தூபி அமைக்க ஏற்பாடு

சுனாமி அனர்த்தத்தால் மணற்காடு கிராமத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக நினைவுத்தூபி ஒன்றை அமைக்க கடற்தொழிலாளர் சமாசமும், பொதுமக்களும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

சுனாமி கடற்கொந்தளிப்பால் மணற்காடு கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் கிராம மக்கள் தற்போதும் தமது கிராமத்துக்கு செல்ல அஞ்சுகிறார்கள். அவ்வாறான இழப்புகளை சந்தித்த மக்கள் தமது உறவுகளை நினைவுகூருவதற்கான நினைவுத்தூபி ஒன்றை அமைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## மனையியல் கண்காட்சி

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாதர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் தையல், மனையியல் கண்காட்சி கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று காலை 10.00 மணிக்கு யாழ்.பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்ளவுள்ளார். (63)

## இல்ல மெய்வன்மை போட்டி

சங்கானை சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி ச. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜும், சிறப்பு விருந்தினராக சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளையும் கலந்துகொள்ளவுள்ளனர். (48)

## சான்றிதழ்கள் அனுப்பிவைப்பு

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த ஆண்டு முறைசாராக்கல்விப் பிரிவால் நடத்தப்பட்ட பயிற்சிகளில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# உங்களின் தேவைகளையும் நிறை

# தமிழரசி நெகிழத் தெ

## உங்கள் சந்தையில் நீ

சூழல் கெடுவதைத் தடுத்து, இயற்கையோடு இசைவாக்கம

வேதியல் பொருள்கள் கலந்து ஆக்கப்பட்ட நெகிழ

## இப்பொழுது உங்கள்

உலகின் வளர்ச்சியடைந்த முன்னணி நாடுகள், சூழல் பா

ஆக்கங்களின் தரத்திற்கு இணையாக, நம் நாட்டில் ஆ

# தமிழரசி நெகிழ

**வேதியல் பொருள்கள் கலந்த எமது நெகிழ ஆக்கங்களாவன.**

- நெகிழப்பைகள் (சொப்பிங் பாக் குறோசறி பாக்)
- உணவுத்தாள்கள் (லஞ்சீற்)
- வாணிபப் பெயர்கள் பொறிக்கப்பட்ட நெகிழப்பைகள் (பிறின்டிங் பாக்)
- நெகிழத்தாள்கள் (பொலித்தீன் வகைகள்)

வேதியல் பொருள்கள் அடங்கிய இவ்வ
பயன்பாடு ஓராண்டு நிறைவில் செயலிழந்து
கலந்துவிடும். இதனால் சூழல் கெடுவ
இவ்வேதியல் பொருள்களின் சேர்க்கையா
எத்தகைய நலக்கேட்டையும் விளைவிக்க
கதிரவனின் ஒளிபடுமிடங்களில் இதனை
இதன் பயன்பாட்டுக்காலம் குறைவடைய
பொருள்களின் பயன்பாட்டுக் காலத்தின்
வேதியல் பொருள்களின் உள்ளடக்க வீ
அளவுகளில் சேர்க்கப்படுகின்

வன்னியில்
எமது முகவராண்மையாளர்:

மருதம் அணைகலன் வாணிபம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.
தொலைபேசி இல : 021 - 228 - 5880
228 - 5706

யாழில்
எமது முகவராண்மையா

ஆஞ்சநேயர் வாணிபம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021
077

றைவு செய்து சூழலையும் பாதுகாக்க

# தொழிலக ஆக்கங்கள்

## நீங்கள் பெற்றுக்கொள்ள

ாக்கமடைந்து உக்கி, அழிந்து மண்ணிற்கு வளஞ்சேர்க்கும்
நெகிழப்பைகள், பொதிசெய்பொருள்கள், தாள்கள்

## ள் கைகளில் கிடைக்க,

ழல் பாதுகாப்புக்குகந்த வகையில் ஆக்கஞ்செய்யும் நெகிழ
ழல் ஆக்கம் செய்து வழங்கும் தனித்துவமான நிறுவனம்

# ழத் தொழிலகம்

டங்கிய இவ்வாக்கங்களின்
செயலிழந்து உக்கி. மண்ணோடு
சூழல் கெடுவது தடுக்கப்படும்.
சேர்க்கையானது. நுகர்வோருக்கு
ம் விளைவிக்காது. நேரடியாகக்
ளில் இதனை வைத்திருந்தால்
குறைவடையும். இவ்வாக்கப்
டுக் காலத்தின் தேவையறிந்து
உள்ளடக்க வீதம் வேறுபட்ட
சர்க்கப்படுகின்றன.

*நுகர்வோரே!*
*எங்கள் வேண்டுதல்*

சூழலின் நலன்கருதி ஆக்கப்பெறும்.
எமது பொருள்கள் பற்றி, சூழல் நலனில் அக்கறை கொள்ளாதோரும்,
வாணிப நோக்கங் கருதிய சிலரும் நுகர்வோர் மனங்களில்
அச்சத்தினை உண்டாக்கும் பொய்களைப் பரப்புகின்றனர்.
இதனைப்பற்றி மக்கள் அச்சங்கொள்ளத் தேவையில்லை.
சந்தையில் ஏற்படும் நெகிழப்பைத் தட்டுப்பாடு தற்காலிகமானதே. மிக
விரைவில் இத்தட்டுப்பாட்டை நீக்கி, உங்கள் தேவையை நிறைவு
செய்வோம். எங்கள் ஆக்கங்கள் உங்கள் கைகளில்
வந்தடைவதில் உங்கள் ஆர்வமும் அக்கறையுமே
எங்கள் வேண்டுதல்.

*ாண்மையாளர்:*
ாணிபம்,
,
இல: 021 - 4590962
077 - 3024507

**சூழல் நலன் காப்போம்;**
**மக்களின் தேவையை நிறைவு செய்வோம்.**

**தமிழரசி நெகிழத் தொழிலகம்**
**கிளிநொச்சி.**
தொலைபேசி இல: 021 - 228 - 5909

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான செயற்திட்டங்களை துரிதமாக மேற்கொள்கிறோம்

## தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன்

(கிளிநொச்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான செயற்திட்டங்களை தமிழீழ மாணவர் அமைப்பு மிகவும் துரிதமாக மேற்கொண்டு வருவதாக, தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடற்கொந்தளிப்புக் காரணமாக முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேசங்களில் பாதிப்புக்குள்ளாகியுள்ள மாணவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான சிறப்பு செயற்திட்டங்களை - சிறப்பு செயலணிகளின் ஊடாக நாம் நேரடியாக மேற்கொண்டு வருகிறோம்.

ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரையான மாணவர்களுக்கான வேலைத்திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

இதேவேளை, வெளியிடங்களில் இருந்து பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு உதவி புரியவரும் அமைப்புக்கள் எம்முடன் தொடர்பு கொள்வதன் மூலம் - நாம் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு எந்த விதமான உதவிகள் தேவை என்பதை தெரியப்படுத்துவதன் மூலம் அதன் பின் அவர்கள் பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு நேரடியாக உதவிகளை வழங்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் 14 பேருக்கு தமிழீழ மாணவர் அமைப்பு 5 ஆயிரம் ரூபா பண உதவி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.




### உதவிப்பொருட்கள் அன்பளிப்பு

(முல்லைத்தீவு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சன்றின் செப்பயின், கத்தரின் செப்பயின் ஆகிய அருட்சகோதரிகள் இருவர் - தமது தனிப்பட்ட முயற்சியின் மூலம் நிதிசேகரித்து, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மூலம் 15 தையல் இயந்திரங்களையும், 300 சிறுவர்களுக்கான பாவனைப் பொருட்களையும் அன்பளிப்புச் செய்துள்ளனர்.


அருட்சகோதரி சன்றின் செப்பயின் என்பவர் கடந்தகால போராட்ட காலத்தில் மல்லாவியில் இயங்கி வந்த எம்.எஸ்.எப்.மருத்துவக் குழுவில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### டி.ஆர்.சி அமைப்பால் நிதியுதவி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பாலிகத்திடல், தாமரைக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் டி.ஆர்.சி அமைப்பின் நிதியுதவியுடன் கழிப்பறைகள் அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் நிலையில், வீட்டுக்கொரு கழிப்பறை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




### பெப்ரவரி 19

1897 : நயாகரா அருவியின் குறுக்கே கயிறு கட்டி அதன்மீது நடந்து அருவியைக் கடந்து முதன்முதல் சாதனை புரிந்த சார்ள்ஸ் பிளான்டின் மரணமடைந்தார்.

1916 : பிரிட்டனில் தேசிய சேமிப்புப் பத்திர விற்பனை முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டது.

1918 : ரஷ்யாவில் நிலத்தை நாட்டுடமையாக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1945 : வங்காளவிரிகுடாவின் தீவு ஒன்றில் பிரிட்டிஷ் படைவீரர்களது தாக்குலுக்குப் பயந்து தங்கியிருந்த ஜப்பானிய படைவீரர்களில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களை தீவிலிருந்த முதலைகள் ஒரே இரவில் கொன்று தின்றன.

1975 : சூரிய சக்தியால் இயங்கும் சோலர் கிராப்ஃட் – 1 என்ற படகின் வெள்ளோட்டம் நடைபெற்றது.

1987 : கடல் ஆய்வு செயற்கைக்கோளான மோஸ் – 1 என்ற செயற்கைக் கோளை ஜப்பான் வானில் ஏவியது.

1992 : லெபனான் ஷியா முஸ்லிம்களின் தலைவரான அப்பாஸ் முஸாவியை இஸ்ரேலியர்கள் கொலை செய்தமைக்காக இஸ்ரேல் மீது லெபனான் போர்ப்பிரகடனம் செய்தது.

தொகுப்பு - சந்துரு

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - பாண்டியன் குளம் மகா வித்தியாலயம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் காணப்படுகிறது. இதனால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்கு கோட்டத்தின் முன்னணிப் பாடசாலையாக உள்ள இந்தப் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

எனினும் இங்கு விஞ்ஞானகூடம், நூலகம், கழிப்பறை வசதி மற்றும் ஆசிரியர் விடுதி என்பன இதுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இதேவேளை - ஆசிரியர்கள் விடுதி, குடிநீர்க்கிணறு, பாடசாலை பழைய கட்டடம், தளபாடங்கள் என்பன புனரமைக்கப்படவேண்டிய நிலையில் உள்ளன. எனினும் இதுவரை எதுவிதமான புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்தப் பாடசாலையில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் வேறு பிரதேசங்களில் இருந்து வந்து கடமை புரிகின்றனர். எனினும் இவர்களுக்குரிய தங்குமிட வசதி இன்மையால், இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இங்கு விஞ்ஞான கூடம், பாடசாலை நூலகம் என்பன இல்லாமையால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைக் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அண்மையில் திருடப்பட்ட பொருட்கள் தமிழீழ காவல்துறையினரால் மீட்பு!

கிளிநொச்சி - ஆனந்தநகரில் இடம்பெற்ற திருட்டுத் தொடர்பாக தமிழீழ காவல்துறையினரால் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் கடந்த 11 ஆம் திகதி 10 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கான சான்றாதாரங்கள் கிளிநொச்சி தமிழீழ காவற்துறையினரால் பெறப்பட்டு, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இது தொடர்பான விசாரணைகளை தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி மக்கள் வங்கியில் இருவர் பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பித்து, மக்கள் வங்கி உத்தியோகத்தர்களை ஏமாற்றிப் பெற்றுக்கொண்ட 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணத்தை மீட்டதோடு - சந்தேக நபர்கள் இருவரையும் கிளிநொச்சி காவல் பணிமனையினர் கைதுசெய்து, கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி - சந்தேக நபர்கள் இருவரையும் இந்த மாதம் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி கிளிநொச்சி காவல்துறையினருக்கு பணிப்புரை விடுத்தார்.

கிளிநொச்சி காவல் பணிமனையினர் அண்மைக்காலமாக மேற்கொண்டு வரும் துரித நடவடிக்கைகள் மூலம் களவு, ஏமாற்று மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டு வருவதுடன், களவாடப்படும் பொருட்களும் மீட்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### உடல் வலுவூட்டல் நிலையம் திறப்பு

கேணல் சங்கர் ஞாபகார்த்த உடல் வலுவூட்டல் நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் இன்று மாலை 3 மணிக்கு கிளிநொச்சி மத்திய மைதானத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விளையாட்டுத் துறை சார் அதிகாரிகள், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# புனரமைக்கப்படாத நிலையில் செல்வபுரம் பிரதேச வீதி

வவுனிக்குளம் - செல்வபுரம் பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட வீதிகள் இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

செல்வபுரம் முதலாம் வீதி, மரப்பால வீதி ஆகிய வீதிகள் உலக உணவுத் திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்டு, கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் இதுவரை இந்த வீதிகள் புனரமைக்கப்படவில்லை. இதனால் இந்தப் பகுதி மக்கள் பிரயாணத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதிகளை புனரமைப்புச் செய்துள்ள ஒப்பந்தக்காரர்களின் அசமந்தப் போக்கே இந்த வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாமைக்கான காரணம் என இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

### நெற்செய்கை அறுவடை விழா

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேசத்தில் 2004 - 2005 காலபோக நெற்செய்கை அறுவடை விழா அண்மையில் கீரிசுட்டான் கிராம வயலில் நடைபெற்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் நெடுங்கேணி இளம் விவசாய கழகம், விவசாயத் திணைக்களம் ஆகியன இணைந்து இந்த விழாவை நடத்தியிருந்தன.

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# காணாமற்போன 189 பேருக்கு அரச செயலகத்தால் மரண சான்றிதழ்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரசேதத்தில் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் 1998 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போன 189 பேரை உயிரிழந்தவர்கள் எனக் கருதி, கிளிநொச்சி அரச செயலகத்தால் மரணச் சான்றிதழ் வழங்கப்பட்டுவருவதாக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில், கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து மீண்டும் தமது வீடுகளை பார்க்கச் சென்ற 189 அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போயினர்.

1998 ஆம் ஆண்டு 'ஓயாத அலைகள் 2' நடவடிக்கை மூலம் கிளிநொச்சியை தமிழீழ விடுதலைப் புலிகள் மீட்டெடுத்தனர்.

அதன் பின்னர் இதுவரை மீட்கப்பட்ட பிரதேசங்களில் 72 மனித எலும்புக் கூடுகள் - மலக்குழிகள், கிணறுகள், ஆற்றுப்படுக்கைகள் என்பவற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் 12 மனித எலும்புக்கூடுகள் காணாமற்போனவர்களுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளன.

கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் கிளிநொச்சி தமிழீழ காவல் துறையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருவதாக தமிழீழ காவல் துறையினர் தெரிவித்தனர்.

# முல்லைத்தீவு-கரும்புள்ளியான் பிரதேசத்தில் வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கரும்புள்ளியான் பிரதேசமக்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் மிக நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இங்கு வரட்சிக் காலங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், சுத்தமான குடிநீர் கிடைக்காமையால் பல தொற்று நோய்களை எதிர்கொள்ள வேண்டிய அபாயம் நிலவுகிறது.

இந்தக் கிராமத்தின் பிரதான வீதிகள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக எதுவித புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படாத நிலையில், படுமோசமாக சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது.

கடந்த காலத்தில் பெய்த தொடர்மழை காரணமாக இந்தக் கிராமத்தின் முன்பள்ளி சேதமடைந்துள்ளது. இந்த முன்பள்ளி இதுவரை புனரமைப்புச் செய்யப்படாமையால், சிறார்களின் கற்றல் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன.

இந்த முன்பள்ளி புனரமைப்புச் செய்வது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் தெரியப்படுத்தியும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.